விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 24 வியாழக்கிழமை (10.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 295

# கனடாவின் எதிர்ப்பு இலங்கையை பாதிக்காது

## ஏனைய நாடுகள் ஒத்துழைக்கும் என்கிறார் பீரிஸ்



(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கனேடிய பிரதமர் கலந்து கொள்ளாதது மாநாட்டின் மீதோ அல்லது இலங்கை மீதோ எதிர் மறையான தாக்கங்கள் எதனையும் ஏற்படுத் தாது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பேராசிரியர் பீரிஸ மேலும் குறிப்பிடுகையில்,

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள போவதில்லை என்று கனேடிய பிரதமர் ஸடீபன் ஹார்பர் எடுதத

20-ம் பக்கம் பார்க்க

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் கடமைகளை பொறுப்பேற்றார்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன் நேற்றையதினம் காலை தமது கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக்கொண் டுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் நேற்றுக் காலை யாழ். கோவில் வீதியில் சம்பிரதாய முறைப் படி திறந்து வைக்கப்பட்டது.

இதனையடுத்துவடக்கு மாகாண சபையன்முத

20-ம் பக்கம் பார்க்க

## இந்தியாவின் அழுத்தம் 13 ஐ பாதுகாக்க அவசியம்

### கூறுகிறார் ஹக்கீம்



(கொழும்பு)

13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை பாதுகாக்கவும் அதற்கு அப்பால் சென்று அரசியல் அதிகாரங்களை பெறவும் இந்தியாவின் அழுத் தங்கள் அவசியமானது என நீதி அமைச்சர் ரவூப ஹக்கீம் தெரிவித்தார். இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார

20-ம் பக்கம் பார்க்க

# இலங்கையின் தலைமைக்கு கமரூன் கடுமையான செய்தியை தெரிவிப்பார்

### - த ரைம்ஸ் ஊடகம் செய்தி

(லண்டன்)

இலங்கையின் அரசியல் தலை மைக்கு கடுமையான செய்தி ஒன்றை பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் எடுத்துச் செல்ல வுள்ளதாக லண்டனில் இருந்து வெளியாகும் த ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.



கொழும்பில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டுக்குச் செல்லும் போதே, பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் இவ்வாறு கடுமையான செய்தியை எடுத்துச் செல்லவுள் ளதாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் தொடர் பில் இலங்கை அரசாங்கம் பொறுப் புக்கூறத் தவறிவிட்டதால், கொழும் பில் அடுத்த மாதம் இடம்பெறவு ள்ள பொதுநலவாய அரசியல் தலை வர்களின் உச்சி மாநாட்டைப் புறக் கணிப்பதாக கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் கடந்த திங்கட்கிழமை அறிவித

20-ம் பக்கம் பார்க்க

# அமைச்சரவை அதிகரிப்பு மகிந்த சிந்தனை மீறல்

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

அமைச்சரவையின் உறுப்பினர களை அதிகரிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானம் மஹிந்த சிந்தனைக் கொள்கையை மீறும் செயலாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இன்றையதினம் 13 க்கும் அதிக மான ஆளும் கட்சி உறுப்பினர்கள் பிரதியமைச்சர்களாக பதவியேற்க வுள்ளமை தொடர்பில் கருத்து வெளி யிட்டபோதே நாடாளுமன்ற உறுப் பினர் கயந்த கருணாதிலக்க இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அமைச்சரவையின் உறுப்பி னர் களின் எண்ணிக்கையை 25 ஆக வரையறுக்கவுள்ளதாக மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் உலகிலேயே மிகப்பெரிய அமைச்சரவையை பேணும் பாவச செயலுக்கு நாட்டுமக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

20-ம் பக்கம் பார்க்க

## போர்க்குற்றம்

# பங்களாதேஷ் முன்னாள் அமைச்சருக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பு

(டாக்கா)

பங்காளாதேஷின் பிரதான எதிர்க் கட்சியான தேசியவாதக் கட்சியைச் சேர்ந்த 83 வயதுடைய முன்னாள் அமைச்சர் அப்துல் ஆலிம் மேற்கொண்ட போரக்குற்றங்களுக்காக ஆயுள் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. 1971ஆம ஆண்டு பங்களாதேஷில் இடம்பெற்ற விடுதலைப் போராட்டத்தின் போது நூற்றுக் கணக்கான இந்துக்களை படுகொலை செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே, இவருக்கு சிறப்பு போர்க்குற்ற நீதி மன்றம் இத்தண்டனையை வழங்கியுளளது.

இந்த விடுதலைப் போராட்டக் காலத்தில் பெருமளவிலான கூட்டுப்படு கொலைகளை மேற்கொண்ட ஆயுதக்குழு ஒன்றை வழி நடத் தியதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

19-ம் பக்கம் பார்க்க

## பிரபாவிற்கு நடந்ததே ஹக்கீமிற்கும் நடக்கும்

### - விமல் வீரவன்ச

(கொழும்பு)

ரணில் மற்றும் பிரபாகரனுக்கு ஏற்பட்ட தலைவிதியே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் ஏற்படும் என அமைச் சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள் ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின தலைவரான வீரவன்ஸ வெளியிட் டுள்ள அறிக்கையில் இதனை கூறியுள்ளார்.

19-ம் பக்கம் பார்க்க

# கனடாவின் தீர்மானத்திற்கு பொதுநலவாயம் கவலை

(லண்டன்)

அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் மிகக் குறைந்த மட்டத்தில் பங்குபெறப் போவதாக கனடா தீர்மானித்ததை யிட்டு பொதுநலவாய செயலகம் கவலை தெரிவித்துள்ளது.

எந்த மட்டத்தில் பங்குபெறுவது என தீர்மானிப்பது அந்தந்த நாட்டை பொறுத்த விடயமாகும் என செயல கத்தின் பேச்சாளர் றிச்சாட் உக்கு ஏபிசி செய்தி சேவைக்கு தெரிவித்துள் ளார்.

கனடா, பொதுநலவாய குடும் பத்தின் மதிப்பு மிக்க அங்கத்தவர். அதன் பங்களிப்பு வேறு அங்கத் துவ நாடுகளுக்கு பெரு மளவு நன்மைகளை

20-ம் பக்கம் பார்க்க

# இலங்கையில் பொதுநலவாய மாநாடு; கடுமையாக சாடுகிறது கனடா

(கொழும்பு)

இலங்கையில் நடக்கவிருக்கும் பொது நலவாய மாநாட்டில் தான் கலந்து கொள்ள மாட்டேன் என்று கூறியுள்ள கனடாவின் பிரதமரான ஸ்டீபன் ஹார்பர்,

அதுமாத்திரமன்றி பொது நலவாய அமைப்புக்கான நிதியுதவியையும் கனடா நிறுத்துவது குறித்து பரிசீலிப்பதாகவும் கூறியுள்ளார்.

பொது நலவாய அமைப்புக்கு நிதி உதவி [illegible] இருக்கும் கனடா வருடாந்தம் 20 மில்லியன் டொலர்களை அந்த அமைப்புக்கு வழங்கி வருகிறது.

இலங்கையில் மனித உரிமை நிலைவரங்களில் முன்னேற்றம் ஏற்பட வில்லை என்று காரணம் காட்டியே ஸ்டீ பன ஹார்பர், அந்த மாநாட்டை பகிஷ்கரிப பது என்று அறிவித்துள்ளார்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் முடிவுக்குவந்த இலங்கைப் போர்மற்றும அதன்பின்னரான

20-ம் பக்கம் பார்க்க



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அஞ்சல் தலைமை அலுவலகத்தில்

# தற்காலிக பணி ஊழியர்கள் நேற்று நிரந்தர நியமனம் கோரி போராட்டம்




(யாழ்ப்பாணம்)

யாழ்.அஞ்சல் தலைமையகத்தில் தற்காலிகமாக பணியாற்றிவரும் ஊழியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி அஞ்சல் தினமான நேற்று இரண்டு மணி நேரம் அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் பதிவு செய்யப்பட்ட தற்காலிக ஊழியர்கள் ஈடுபட்டனர்.

சர்வதேச அஞ்சல் தினமான நேற்றுக் காலை யாழ். அஞ்சல் தலைமையகத்தில் இடம்பெற்ற அஞ்சல்தின நிகழ்வுகளிலும் குறித்த ஊழியர்கள் பங்கு கொள்ளாமல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். அத்தோடு வருடம் தோறும் அஞ்சல் தினத்தில் ஊழியர்கள் செய்துகொள்ளும் சத்தியப்பிரமாண நிகழ்விலும் குறித்த ஊழியர்கள் பங்குகொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பகிஷ்கரிப்பு தொடர்பாக ஊழியர்கள் மேலும் தெரிவிக்கையில்,

அஞ்சல் தினத்தைமுன்னிட்டு பிரதி அஞ்சல்மா அதிபர் யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் யாழ்.பிரதம அஞ்சல் அலுவலகத்தில் வேலைக்கான வெற்றிடங்கள் இல்லை எனத் தெரிவித்துள்ளார். ஆனால் இங்கு 13 வெற்றிடங்கள் இருக்கின்றபோது அவர் ஏன் அவ்வாறு கூறியிருந்தார் எனத் தெரியவில்லை. இங்கு நீண்டகாலமாக 50இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் தற்காலிகமாகக் கடமையாற்றி வருகின்றனர். அவர்கள் மூலமே தற்போது உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

இதேவேளை அஞ்சல் அலுவலக மேலதிகாரிகள் தம்முடன் காலை 9.30 மணியளவில் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளை அடுத்து தமது கோரிக்கைகளுக்கு இரண்டு மாதத்திற்குள் தீர்வு வழங்கப்படும் என உறுதி அளித்தால் பகிஷ்கரிப்பை கைவிட்டு மீண்டும் பணிகளை ஆரம்பிப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (செ-6)

## உதைபந்தாட்ட இன்றைய போட்டி

(கரவெட்டி)

வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய் பாரதி அணியை எதிர்த்து கற்கோட்டை சென்.சேவியர் அணி மோதவுள்ளது. பிற்பகல் 4.30 மணிக்கு மானிப்பாய் ரெஞ்சர்ஸ் அணியை எதிர்த்து நவுண்டில் கலைமதி அணி மோதவுள்ளது. (24)

**தொடர்ந்தும் மேலதிக சேவையில்...**

இலங்கையின் எப்பாகத்திற்கும் குறைந்த செலவில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள் மற்றும் எதுவித பார்சல் ஆயினும் மறுநாள் **(24 மணித்தியாலயம்)** உரிய முகவரிக்கு (Door to Door) ஒப்படைக்கப்படும்.

**குறிப்பு:** விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, துணுக்காய், பூநகரி ஆகிய வன்னி மாவட்டங்களுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

WESTERN UNION MONEY TRANSFER

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(சி-5107) T.P. No.:-021 222 5392

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது நற்பணி மன்றத்தின் செயலாளரும் யா/புத்தூர் மடிஹே பஞ்சசீஹ வித்தியால்ய அதிபரும் ஆகிய

**திரு.கு.ரவீந்திரன்**

சிறந்த அதிபருக்கான "பிரதீபா பிரபா" பெற்றமையை இட்டு பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல உயர்வுகள் பெற ஆற்றங்கரை வேலவன் அருள்புரிவாராக.

செயற்குழு,
லண்டன் நற்பணி மன்றம்,
தொண்டைமானாறு.

(சி-5122)

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மத்திய சனசமூக நிலையத்தின் வாணி விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு சனசமூக நிலைய தலைவர் வி.குணேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை சிவநெறிச் செல்வர் சிவசண்முகவடிவேல் வழங்கவுள்ளார்.

இதன்போது அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (செ-5)

* * *

(யாழ்ப்பாணம்)

சிற்றிசன் டெவலொப்மென்ட் பிஸ்னஸ் பினான்ஸ் நிறுவனத்தின் வாணி விழா நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லை.ஞானசம்பந்த ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் சிறப்பு விருந்தினராக நிறுவனத்தின் தலைமை காரியாலய பிரதிப் பொதுமுகாமையாளர் இ.கார்த்திக் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது நடனம், நாடகம், பட்டிமன்றம், இசைச்சொற்பொழிவு என்பன இடம் பெறவுள்ளன. (செ-5)

## நல்லூர் கோட்டத்தில் இலவச பாடநூல்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகள் 2014ஆம் ஆண்டிற்குரிய தரம் 7,8,9, 10,11 மாணவர்களுக்கான இலவசப்பாட புத்தகங்களில் ஒரு பகுதியை இன்று நல்லூர்க் கோட்டத்தில் பெற்றுக்கொள்ளலாம் என நல்லூர்க் கோட்ட கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுமார் அறிவித்துள்ளார். (ந)

## மின்சாரம் தடைப்படும்

(மல்லாவி)

மின்சார கம்பங்களுக்கு அருகில் உள்ள மரங்களை அகற்றுவதற்காக நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை ஒட்டுசுட்டான் சந்தியில் இருந்து நெடுங்கேணி, செம்மலை, அளம்பில், முள்ளியவளை உட்பட முல்லைத்தீவு நகர பிரதேசங்கள் உள்ளடங்கலாக மின்சாரம் துண்டிக்கப்பட்டிருக்குமென முல்லை.மாவட்ட மின் அத்தியட்சகர் ப.செந்தில்செல்வன் அறிவித்துள்ளார்.(ம-15)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யா/நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் 2013-ம் ஆண்டு நடைபெற்ற 5-ம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 173 புள்ளிகளைப் பெற்ற மாணவன்

**செல்வன் நே.சசிக்காந்**

மேன்மேலும் கல்வியில் சிறந்து விளங்கி உயர்வடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம். இவரின் கல்விக்கு வித்திட்ட வகுப்பாசிரியை திருமதி ற.தர்மலிங்கம் அவர்களுக்கும் கண்ணன் கல்வி நிலைய ஆசிரியை திருமதி ம.சுமதி அவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்
மாமன்மார், அத்தைமார், சித்தப்பா, சித்திமார், அண்ணன்மார், அக்காமார், அம்மம்மா-அம்மப்பா, மச்சான்மார்

**BUTTERFLY INTERNATIONAL SCHOOL**
**BLOOMING BUDS DAY CARE CENTRE**

ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

Butterfly International BIS Education is Salvation

MAIN STREET, CHANKANAI.

KEERIMALAI ROAD, PANDATHARUPPU.

Blooming Buds Day Care Centre — Natured Buds Always Bloom

**T.P.: 077 2436737 - 077 8907229**

யாழ்ப்பாண மாவட்டத்தில் தரம் வாய்ந்த முன்னணி ஆங்கிலமொழி மூலமான பாலர் பாடசாலைகளான BUTTERFLY INTERNATIONAL SCHOOL, BLOOMING BUDS DAY CARE CENTRE க்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| Play Group | Montessori | Pre School |
| --- | --- | --- |
| வயது 2 + முதல் | வயது 3 + முதல் | வயது 5 முதல் |
| வயது 3 + வரை | வயது 4 + வரை | வயது 5 + வரை |



- சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட Dr. Maria montessori இன் Method ல் உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், அனுபவமும் அர்ப்பணிப்பும் கூடிய ஆசிரியர்களினாலான கற்கை நெறிகள்.
- சிறார்களின் திறமைகளை வெளிக்கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவர்.
- விளையாட்டுப்போட்டி, English Concert முத்தமிழ்விழா, சித்திரக்கலைக் கண்காட்சி, Graducation Ceremony

புதிய வகுப்புக்கள் அனைத்தும் விஜயதசமி அன்று 14.10.2013 திங்கட்கிழமை ஆரம்பமாகும். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை இன்றே முந்துங்கள். விஜயதசமி அன்று ஏடு தொடக்கும் நிகழ்வு காலை 09.00 மணி - 12.00 மணிவரை இடம்பெறும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

(சி-5121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மனமும் சிந்தனையும்

ஒருவரைப் பார்த்து "உன்னுடைய நண்பர்கள் யார்?" என்று கேட்டுப் பாருங்கள்.

கொஞ்ச நேரம் யோசித்துப் பதில் சொல்லுவார். அவரிடம் "உன்னுடைய எதிரிகள் யார்" என்று கேளுங்கள் கடகடவென்று ஒப்பிப்பார்.

நமது மனம் நண்பர்களை விட எதிரிகளை நன்றாக நினைவில் வைத்திருக்கும். இது ஒரு ஆச்சரியமான உண்மை.

உங்களால் நண்பர்களை மறந்துவிட முடியும். ஆனால் எதிரிகளை மறந்து விட முடியாது.

இது ஒரு வேடிக்கையான நிலைதான்.

அழகான தருணங்களை மறந்து விடுகிறோம். நமது மனம் மலர்களைவிட முட்களைத் தான் கவனிக்கிறது.

தன்னைக் காயப்படுத்தும் எதையும் அது உடனே கண்டு கொள்கிறது.

ஒரு தெளிந்த சிந்தனையுடைய மனம் மிக அழகாக உள்ள எல்லாவற்றையும் கவனிக்கும். தான் நன்றியுடன் உணரக் கூடிய எல்லாவற்றையும் பார்த்து குறித்துக் கொள்ளும். இப்படிப்பட்டவர்களின் வாழ்க்கை இயல்பாகவே நன்றாக அமையும்.

மனதில் உள்ள ஒரு சிறிய அமைப்பை மாற்றுவதைப் பொறுத்துத்தான் இந்த விடயம் என்கிறார் ஓஷோ.

ஒரு யூதக் கோயில் இருந்தாலும் அது யூதர்களின் மடமாகவும் இருந்தது. அந்தக் கோயிலின் தலைமைக் குரு மிகவும் கண்டிப்பானவர்.

இந்தக் கோவிலை ஒட்டி ஒரு தோட்டமும் இருந்தது. அதில் இரண்டு யூதர்கள் நடந்து போய்க்கொண்டிருந்தார்கள். காலையில் ஒரு மணி நேரம் மாலையில் ஒரு மணி நேரம் அவர்கள் நடக்க அனுமதி உண்டு. மற்ற நேரங்களில் மதப் புத்தகங்களை படிக்க வேண்டும். பிற விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

அந்த இரண்டு பேரும் தொடர்ந்து புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள். ஆனால் கோயில் மடத்தில் இருக்கும் போது அவர்கள் புகைபிடிக்க முடியாது. அது கடுமையான குற்றம்.

சரி... நாம் தோட்டத்தில் இருக்கும் போதாவது புகைபிடிக்கலாமா? என்று அவர்கள் இருவருக்குமே ஒரு ஆசை இருந்தாலும் இப்படிக்கேட்டால் மதகுரு என்ன சொல்வாரோ என்று பயம்.

ஒருநாள் அந்த இருவரில் ஒருவன் கலங்கிப் போய் தோட்டத்துக்கு போய்க்கொண்டிருந்தான். அங்கே மற்றவன் ஆனந்தமாக புகைபிடித்துக் கொண்டிருந்தான். அதைப் பார்த்ததும் இவனுக்கு அதிர்ச்சி!

"என்ன இது கேட்காமலேயே ஆரம்பித்து விட்டாயா?" என்றான். "இல்லை நான் கேட்டேன்" என்றான் அவன். "நான் கேட்க என்னை கன்னா பின்னாவென்று திட்டி புகைபிடிக்க வேண்டும் என்றால் நரகத்துக்கு போ என்று சொல்லி விட்டார். உன்னை எப்படி அனுமதித்தார்?" என்று கேட்டான் இவன்.

அவன் சிரித்துக்கொண்டே, "நீ எப்படிக் கேட்டாய் சொல்!" என்றான்.

"ஜெபம் சொல்லும் போது புகைபிடிக்கலாமா? என்று கேட்டேன் சத்தம் போட்டு.அடிக்கவே வந்துவிட்டார்" என்றான் இவன்.

"நான் வேற மாதிரிக் கேட்டேன். ஐயா, புகைபிடிக்கும் போது ஜெபிக்கலாமா? என்று கேட்டேன். அதில் தவறேதும் இல்லை என்று பதில் சொன்னார்" என்றான்.

ஒரு சிறிய மாற்றம் தான்... அது மிகப் பெரிய மாறுதலை ஏற்படுத்தி விட்டது. மனம் நல்ல விதமாக சிந்திக்க ஆரம்பித்தால் மகிழ்ச்சிக்கு பஞ்சம் இருக்காது.

ஒரு கஞ்சன் ஆற்றில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தான். கரையில் நின்ற ஒருவர் "உன் கையைத்தா பிடித்து இழுத்து கரையில் விடுகிறேன்" என்றார். எதையும் கொடுத்து பழக்கம் இல்லாத அவன் கையையும் கொடுக்க மாட்டேன் என்றான்.

இவர் பார்த்தார். உன் கையை கொடு என்று சொல்வதற்குப் பதிலாக நான் என் கையை கொடுக்கிறேன் பிடித்துக் கொள்! என்றார்.

'கப்' என்று பிடித்துக் கொண்டான். இழுத்து கரையில் விட்டு விட்டார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சமூகத்தை வலுவூட்டும் நிகழ்வு

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொதுநூலகத்தினால் அறிவாற்றல் நிறைந்த சமுதாயத்தை உருவாக்கும் வலுவூட்டல் நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தேசிய வாசிப்பு மாத ஆரம்ப நிகழ்வாக சிறுவர் முதியோர் தினம் அனுசரிக்கப்பட்டதுடன் தொடர்ந்து சிரமதானம் விளக்கப் படம் காட்சிப் படுத்தல், நூலக பாவனை நேரத்தை அதிகரித்தல், நடமாடும் நூலக சேவை, புத்தகக் கண்காட்சி, விசேட போட்டிகள் என்பன நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தெரு நாடகம், புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வலுவூட்டல், தாய் சேய் நலன்புரி நிலையத்துக்கு நூலக வலுவூட்டல் முப்பரிமாண நூலக செயற்பாடுகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இன்றைய தினம் மேற்படி நூலகத்தின் ஏற்பாட்டில் "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" எனும் தொனிப்பொருளிலான வீதி நாடகம் பாடசாலைகள், சந்திகள், பொது இடங்களில் காண்பிக்கப்படவுள்ளதாகவும் இவ்வீதி நாடகத்தை மல்லாகம் புத்தாக்க இயக்க அரங்கம் வழங்குவ்தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# டயலொக் வைத்திருப்போரே அவதானமாக இருங்கள்

டயலொக் வழங்கும் பரிசுகளுக்கு பணம் அல்லது eZ Cash மூலம் எவ்விதத் தொகையும் அறவிடப்படுவதில்லை. எந்தவொரு காரணத்திற்காகவும் பரிசுகளைப் பெறுவதற்காக பணம் அல்லது eZ Cash மூலம் எவ்வித தொகையையும் செலுத்த வேண்டாம் என்று டயலொக் ஆசி ஆட்டா பி.எல்.சி.நிறுவனம் பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கின்றது.

டயலொக் பெயரை தவறாகப் பிரயோகித்து சட்டத்துக்கு புறம்பான முறையில் தொலைபேசி பாவனையாளர்களிடம் பணம் பறிக்கும் நோக்கில் சில மோசடியாளர்கள் தாம் டயலொக் நிறுவனத்தில் இருந்து தொடர்பு கொள்வதாகக் கூறி பரிசுகளைப் பெறுவதற்கு பணத்தொகை செலுத்த வேண்டுமென்று பொதுமக்களிடம் பலவந்த கோரிக்கைகளை தொலைபேசி அழைப்பு மூலம் குறுந்தகவல்களாகவும் அனுப்புகின்றனர் என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. டயலொக் இடமிருந்து வழங்கப்படும் பரிசில்களுக்கு எந்தவொரு பணத் தொகையும் அறவிடப்படுவதில்லை என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

உங்களுக்கு அவ்வாறான தொலைபேசி அழைப்புக்கள் அல்லது குறுந்தகவல்கள் கிடைத்தால் 1777 இலக்கத்துக்கு அழைத்து அது தொடர்பான உண்மையான தகவலை நீங்கள் உறுதி செய்து கொள்ள முடியும். அது போன்று உங்களை ஏமாற்றி பணம் பறிக்கும் நோக்கில் எவரேனும் செயற்பட்டிருந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அது பற்றி அறிவிக்குமாறு அந் நிறுவனம் கேட்டுள்ளது. (அ)

# மாவட்ட மட்ட இளைஞர் விருது வழங்கல் போட்டி

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட காரியாலயத்தினால் நடத்தப்படும் மாவட்ட இளைஞர் விருது வழங்கல் போட்டியானது எதிர்வரும் 12, 13 (சனி, ஞாயிறு) திகதிகளில் காலை 9 மணி மணிக்கு யா/சன்மார்க்க வித்தியாலய மண்டபத்தில் (யாழ். பெருமாள் கோயிலுக்கு அருகாமையில்) நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளை தவறாது பங்குபற்றுமாறு தேசிய இள்ளஞர் சேவைகள் மன்ற மாவட்ட அதிகாரி அறிவித்துள்ளார். இதற்கமைய எதிர்வரும் 12 ஆம் திகதி அறிவிப்பாளர், பேச்சு, நாட்டார் பாடல், இளம் பாடல், வயலின், மிருதங்கம் ஆகிய போட்டிகளும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தனி நடனம்/ பரத நாட்டியம், மௌன நடிப்பு/ தனி நடிப்பு, சித்திரம், கிராமிய நடனம், புத்தாக்க நடனம் ஆகிய போட்டிகளும் நடை பெறவுள்ளன.

மேலதிக வ்பரங்களை 021 222 2526 என்னும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 130 | 100-120 | 110 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 100 |
| தக்காளி | 120 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 60 |
| கோவா | 50 | 60 | 80 |
| கரட் | 40 | 60 | 120 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 50 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 100-160 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 100 | 70 | 120 |
| பாகற்காய் | 120 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 |
| சருணைக் கிழங்கு | 40 | 50 | 80 |
| பயற்றங்காய் | 80 | 100 | 120 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 20 | 15 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 120 |
| முருங்கைக்காய் | 40 | 70 | 100 |
| போஞ்சி | 120 | 90 | 120 |
| கீரை - 1 பிடி | 15 | 10 | 30 |
| தேசிக்காய் | 450 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 35-45 |
| இராசவள்ளி | - | 70 | 120 |

# இராசி பலன்

10.10.2013
(புரட்டாதி 24, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 9.15 மணிவரை
கேட்டை பிற்பகல் 12.49 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
சஷ்டி விரதம்

**மேடம்** காலையில் சலசலப்பும் மாலையில் கலகலப்புமாக அமையும், சேமிப்பை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர்.

**இடபம்** சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம், தேக நலனில் கவனம் தேவை, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**கடகம்** செய்தொழில் மேன்மையுண்டு, பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**சிங்கம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் நடைபெறலாம், சொத்துக்களால் ஆதாயமுண்டு, புதிய நபர்களின் சந்திப்புண்டு.

**கன்னி** தூரத்து உறவினர்களால் நன்மையுண்டு, விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**துலாம்** பாராட்டும், புகழும் கூடும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், சகோதர ஒற்றுமை பலப்படும்.

**விருச்சிகம்** பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** விருப்பங்கள் நிறைவேற கந்தனை வழிபட வேண்டிய நாள், சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**மகரம்** உறவினர் வீட்டு சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

**கும்பம்** சமயோசிதப் புத்தியால் பலரையும் கவர்வீர்கள், தொலைபேசி மூலம் கனிவான தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**மீனம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட ஆவணங்களை பெறுவது தொடர்பான நடமாடும் சேவை

(தும்பளை)

மருதங்கேணி பிரதேச செயலகத்திற்குட் பட்டவர்களுக்கு சட்ட ஆவணங்களை எவ் வாறு பெற்றுக் கொள்ளலாம் என்பது தொடர் பான நடமாடும் சேவை எதிர்வரும் திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்கள் நடைபெற வுள்ளது.

இலவச சட்ட உதவி ஆணைக்குழுவின ரால் மேற்கொள்ளப்படவுள்ள நடமாடும் சேவை யில்,

எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஜே/418 தொடக்கம் ஜே/424 வரையான கிராம அலுவலர் பிரிவுக் குட்பட்டவர்களுக்கு குடத்தனை கிறிஸ்து நற்தூது பணியகத்திலும், ஜே/425 தொடக் கம் ஜே/434 வரையான கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு 15ஆம் திகதி செவ் வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு மருதங் கேணி பிரதேச செயலகத்திலும் நடைபெற வுள்ளது.

இந் நடமாடும் சேவையின்போது, பொது மக்கள் தங்களது சட்ட ரீதியான ஆவணங்கள் தொடர்பிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது குறிப் பிடத்தக்கது. (அ-9-19)




# கோலத்தை அலங்கோலப்படுத்தியதால் அழுதுபுலம்பிய வீட்டு உரிமையாளர்கள்

(யாழ்ப்பாணம்)

இந்திய வெளிவிவகார அமைச்சரினால் கையளிக்கப்பட்ட வீட்டின் முன்பாக போடப் பட்டிருந்த கோலத்தை அலங்கோலப்படுத்தி விட்டதாக அழுது புலம்பினர் வீட்டு உரிமை யாளர்கள்.

இந்திய வீட்டுத் திட்டத்தின்கீழ் தெல்லிப் பழை பிரதேச செயலாளர் பிரிவில் நிர்மாணிக் கப்பட்ட இரண்டு வீடுகள் நேற்றுமுன்தினம் இந்திய வெளிவிவகார அமைச்சரினால் நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டு அதற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளிடம் உத்தியோக பூர்வமாக அவை கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சரின் வருகைக்காக சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக வீதியில் கால்கடுக்க வயோதிபர் மற்றும் சிறுவர்கள் உட்பட பலர் காத்து நின்றனர்.


இதேவேளை, வெயிலின் கொடுமை தாங்க முடியாமல் பலர் வீதியில் அல்லற்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

இந்நிலையில் பிற்பகல் 1.30 மணியள வில் வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சிங்கா உள்ளிட்டவர்க ளுக்கு பாண்ட் வாத்திய இசையுடன் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டதோடு மலர்மாலை அணிவித்து ஆராத்தியும் எடுக்கப்பட்டது.

இதன்பின்பு இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு வீடுகளும் இந்திய வெளிவிவகார அமைச்சரினால் நாடாவெட்டி திறந்து வைக்கப்பட்ட அதேவேளை, வீட்டின் முன்வாசல் பகுதியில் பிரமாண்டமாக மிகவும் அழகாக இடப்பட்டிருந்த கோலத்தை இந்திய அமைச்சருக்கு காண்பிக்க வீட்டு உரிமையாளர் கள் ஆர்வத்துடன் இருந்த போதும் தவறுதலாக ஊடகவியலாளர்கள் கோலத்தை அலங்கோல ப்படுத்தி விட்டனர்.

இதனால் மனமுடைந்துபோன வீட்டு உரிமையாளர்கள் அழுது புலம்பியதை அவ தானிக்க முடிந்தது. அத்தோடு அமைச்சரும் கவலையுடன் அந்த அலங்கோலப்படுத்தப் பட்ட கோலத்தை பார்வையிட்டபடி வீட்டை விட்டு வெளியேறினார் என்பது குறிப்பிடத் தக்கது. (அ-6)

*செய்தி* : விக்னேஸ்வரன் முதலமைச்சராக பதவி ஏற்றார்...




நன்றி: சிலோன் ருடே

# மானிய முத்திரைக்கு ம.எண்ணெய் பெறுவதில் மீனவர்கள் சிரமம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் உள்ள கடற்றொழி லாளர்களில் படகு இயந்திரம் வைத்திருப்பவர் களுக்கு கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தினரால் வழங்கப்பட்டு வரு கின்ற மானிய முத்திரைக்கு மண்ணெண் ணெய் பெறுவதில் இப்பகுதி கடற்றொழிலா ளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வரு கின்றனர்.

கடற்றொழிலாளர் ஒருவரின் படகு இயந் திரத்தை இயக்குவதற்கு மாதம் ஒன்றுக்கு 375 லீற்றர் மண்ணெண்ணெய் தேவைப் படும் என இனங்காணப்பட்டது.

இதன் அடிப்படையில் முன்னர் ஒரு லீற் றர் 81ரூபா 60 சதமாக விற்கப்பட்டது. தற்போது 106ரூபா 60 சதமாக விலை உயர்த்தப்பட் டுள்ளது.

இதன்மூலம் மேலதிகமாக பெறப்படும் 25 ரூபாவை குறித்த திணைக்களம் மானியமாக கடற்றொழிலாளர்களுக்கு வழங்கி வருகின்றது.

இதன்படி மானியமாக மாதமொன்றுக்கு 9 ஆயிரத்து 375 ரூபா கடற்றொழிலாளருக்கு வழங்கப்படுகின்றது.

இந்த முத்திரைக்கு வடமராட்சி கிழக் கிலுள்ள கடற்றொழிலாளர்கள் மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீண்ட தூரம் பய ணித்து சாவகச்சேரி எரிபொருள் நிரப்பு நிலை யத்திற்கு செல்ல வேண்டியுள்ளது.

அத்தோடு வடமராட்சி கிழக்கிலுள்ள தனி யார் நிறுவனங்கள் 9 ஆயிரத்து 375 ரூபா முத்திரையை பெற்றுக் கொண்டு 4 ஆயிரம் தொடக்கம் 6 ஆயிரம் ரூபா வரை பெறுமதியான மண்ணெண்ணெயை இவர்களுக்கு வழங்கு கின்றன.

இதனால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படு கின்றனர். எனவே, வடமராட்சி கிழக்கு கடற்றொழி லாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் தற்போது வடமராட்சி கிழக்கில் திறக்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இம் மண் ணெண்ணெய் முத்திரையின் பெறுமதிக்கு ஏற்ப மண்ணெண் ணெயைப் பெற்றுக் கொள் வதற்கு ஆவன செய்ய வேண்டுமென மீனவ மக்கள் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (அ-9-64)

## ஹற்றன் நஷனல் வங்கியின் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியினால் நடத் தப்படும் நடுத்தர தொழில் முயற்சியாளர் களுக்கான பயிற்சிப் பட்டறை இன்று வியா ழக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு யாழ்ப் பாணம் ஹற்றன் நஷனல் வங்கியின் பசுமைக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறையில் யாழ். குடா நாட்டிலுள்ள பல்வேறு வகையான தொழிற் துறையை சார்ந்த முயற்சியாளர்கள் அனை வரும் பங்குபற்றமுடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது. (அ-5)



இலங்கைக்கு இரண்டு நாட்கள் பயணமாக வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் நேற்று முன்தினம் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு வீடுகளை நாடாவெட்டி திறந்துவைத்து உத்தியோகபூர்வமாகக் கையளித்ததைப் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.ஆர். கரன்)

# வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் பதவி ஏற்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக்களின் தலைவரும் பாரா ளுமன்ற உருப்பினருமான இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

நாளைய தினம் முற்பகல் 8.30 மணிக்கு தந்தை செல்வா சதுக்கத்தில் நடைபெறும் மலரஞ்சலியைத் தொடர்ந்து அங்கிருந்து ஊர்வலமாக வீரசிங்கம் மண்டபத்திற்கு அழைத்து வரப்படும் உறுப்பினர்கள் அங்கு தமது பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொள் வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# மந்திகை முருகன் கோயில் வீதியை புனரமைக்குக

(புன்னாலைக்கட்டுவன்)

புலோலி வடமேற்கு மந்திகை முருகன் கோயில் வீதி சுமார் 40 வருடங்களுக்கு மேலாகப் புனரமைப்புச் செய்யப்படாததினால் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாதள விற்கு சேதமடைந்துள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சுமார் 3 கிலோமீற்றர் தூரமுடைய இவ் வீதி ஊடாக அன்றாடம் நூற்றுக்கணக்கான மக்கள் போக்குவரத்தை மேற்கொள்கின்றனர்.

இவ்வீதியில் பாரிய குண்டுகளும் குழி களும் காணப்படுவதால் விபத்துக்கள் இடம் பெற வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதாக பய ணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் குறித்த வீதியை புனரமைப்புச் செய்ய ஆவணசெய்ய வேண்டு மென மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர். (அ-9-78)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்பெண்களாக சென்றவர்களில் 463 பேர் சடலங்களாக அனுப்பப்பட்டனர்

## ராமநாயக்க எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

பணிப்பெண்களாக இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றவர்களில் 463 பேர் கடந்த வருடத்தில் சடலங்களாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 300 இற்கும் அதிகமானோர் 30 வயதுக்கும் குறைவானவர்கள் என ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியான ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தின அமர்வின் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் கேள்வியொன்றைத் தொடுத்து விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

சட்டங்களும் கட்டுப்பாடுகளும் மீறப்பட்ட நிலையில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்வோர் அங்கு பல்வேறு கொடுமைகளையும் சித்திரவதைகளையும் அனுபவிக்கின்றனர்.

இதேவேளை 2012 ஆம் ஆண்டில் மாத்திரம் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து 463 பணிப்பெண்களின் சடலங்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பணிப்பெண்களாக செல்வோர் உடலளவில் ஆரோக்கியமானவர்கள் என்ற மருத்துவ சான்றிதழும் வழங்கப்படுகின்றது. நிலைமை இவ்வாறிருக்கும் போது எப்படி இவ்வளவு பெரும் தொகையினர் மாரடைப்பால் மரணிக்க முடியும்.

இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற உடல்களில் காயங்கள் காணப்படுகின்ற அதே வேளை உடலின் சில உறுப்புகளும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

எனவே இது குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் பணிப்பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்என்றார். (அ-2)

## அம்மா பகவானின் மகா மேரு அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்கத்தின் இலட்ச குங்கும அர்ச்சனை, மகா மேரு அபிஷேக நீகழ்வுகள் நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடி சைவ பரிபாலன சபை மண்டபத்திலும் சுன்னாகம் ஐயனார் வீதியில் அமைந்துள்ள சற்சங்கத்திலும் நடைபெறவுள்ளது. (அ-5)


### தேவை

கணனி தட்டெழுத்தாளர் (பெண்)
தமிழ். ஆங்கிலம் முன் அனுபவம் விரும்பத்தக்கது.
நிழற்படப்பிரதியாக்க உதவியாளர்
(போட்டோப் பிரதி - ஆண்/பெண்)
ஆங்கில அறிவு. கணனி அறிவு விரும்பத்தக்கது

'பிரகாந்த்'
55, பலாலி வீதி, திருநெல்வேலி.
(கொமர்ஷல் வங்கிக் அருகில்) (4140)

### வாடகைக்கு

சுண்டுக்குளியில் பிரபல பாடசாலைகளுக்கு அண்மையில் பகுதி வீடு அல்லது அறை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 4 - 6 pm
67/1 குருசோ வீதி, சுண்டுக்குளி. (4137)


## இணைந்த கணித பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

2014 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் இணைந்த கணித பாட முன்னோடி பரீட்சை நடத்தப்பட்டது. இப் பரீட்சையில் அதிக புள்ளி களைப் பெற்ற மாணவர் விபரத்தை வடமா காண கல்விப் பணிப்பாளர் செல்வராசா அறிவித்துள்ளார்.

மாணவர்களின் விபரம் வருமாறு, K.ஹதீஸ் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), S.அனுசன் (யா/ஹாட்லிக் கல்லூரி), P. டனுகீசன் யா/யாழ். இந்துக் கல்லூரி), T.வைகுந்தன் (யா/ஹாட்லிக் கல்லூரி), G.கபிலன் (யா/ஹாட்லிக் கல்லூரி), S.சுதர்சன் (யா/யாழ். இந்துக் கல்லூரி),S. சதீசரன் (யா/ஹாட்லிக் கல்லூரி), N.பத்மபிரியன் (யா/யாழ்.இந்துக் கல்லூரி). (அ)




குறைந்த கட்டணத்தில்
24 மணி நேர சேவை
Northern Central Hospitals
24/7 ONLY MULTI SPECIALITY HOSPITAL IN JAFFNA

நொதன் சென்றல் வைத்திய சாலை வழங்கும் பிரத்தியேக வைத்திய சேவைகள்

வட பகுதி மக்களின் தேவை கருதி நொதன் சென்றல் வைத்தியசாலை பல நவீன பிரத்தியேக வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை சேவைகளை நோயாளிகள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லாது இங்கேயே வழங்கி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இங்கு வழங்கப்படும் நவீன சேவைகளாவன:

- சிறு நீர் தொகுதி சத்திர சிகிச்சை, கற்கள் அகற்றுதல் உட்பட (Urology)



அதி நவீன உபகரணங்கள் கொண்டு சிறு நீரக சத்திர சிகிச்சை நிபுணரால் உடலில் காயமேற்படாது கற்கள் அகற்றுதல் உட்பட சகல சிறு நீர்த்தொகுதி சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

- நரம்பியல் சிகிச்சை (EMG, EEG, Sleep Disorders)



நரம்பியல் நோய்களுக்கு மின்னியல் (EMG,EEG) பரிசோதனை மேற்கொள்ளப் படுவதுடன் நித்திரை குறைபாடுகளுக்கும் 24 மணி நேர (Sleepstudies) சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- லாபறஸ்கோப்பி (Laporoscopy)



நவீன கருவி மூலம் வயிற்றில் சிறு துழை யிட்டு இச்சத்திர சிகிச்கை சத்திர சிகிச்சை நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.
நோயாளி உடனடியாகவே சத்திர சிகிச்சையின் பின்பு வீடு செல்லமுடியும்.

- முறிவு தெறிவு , மூட்டுக்கள் சத்திர சிகிச்சை



வட பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் நொதன் சென்றல் வைத்தியசாலையில் மட்டுமே முறிவு தெறிவு மற்றும் மூட்டு நோய்களுக்கான சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.அத்துடன் வார மொரு தடவை ஆலோசனை சேவையும் சிகிச்சையும் அளிக்கப்படுகின்றது.

342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9988, 021 221 9977,021 222 2263 Fax: 021 222 2263
Web : www.nchjaffana.com E-mail: nchjaffna@gmail.com
(சி/5108)




# நவராத்திரி பாமாலை

நீந்தன் அருள் வேண்டுகிறோம் திரிபூரணியே!

திருமகளின் தாழ் வணங்கி திருநாளில் கொலுவிருத்தி
நிந்தன் அருள் நாம் வேண்டி நவ நாளில் ஒளியேற்றி
லக்சுமியை தானிருத்தி செல்வத்தினை வரவிருத்தி
சிறப்புடனே நம் தலை வணங்கி நவராத்திரி நாளாம் இந்நாளில்
திருபூரணிக்கு திரி நாட்கள் நோன்பிருந்து
நவ நாளை கொண்டாடிடுவோம். நிந்தன் அருள் வேண்டுகிறோம்
நிலையாத வாழ்வு வாழ்வதற்காய் நிறைய அருள் தந்திடுவீர்
அம்மா நித்யமான வாழ்வுக்காக.

**பா.தர்சன்**
தரம்-10 (யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்)

அன்பு மாணவச் செல்வங்களே! நவராத்திரிப் பாமாலைக்கு தங்களிடமிருந்து கவிதைகளை எதிர்பார்க்கின்றோம். தங்கள் கவிதைகளை **"வலம்புரி" நவராத்திரிப் பாமாலை, இல: 2 , 3 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி , யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## மெய்கண்டான் மகா வித்தி. பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய ஸ்தாபகர் தினம் மற்றும் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை முன்றலில் வித்தியாலய அதிபர் எஸ்.கணேசதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா, சிறப்பு விருந்தினராக வித்தியாலயத்தின் ஓய்வுநிலை உப அதிபர் இராமலிங்கம் நேசம்மா, கௌரவ விருந்தினராக பழைய மாணவி திருமதி சண்.கணபதிப்பிள்ளை சந்திரலோஜனி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை பழைய மாணவரும் ஆசிரியருமான அ.முருகதாசன் வழங்கவுள்ளார். (அ-5)


### கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: 34 செவ் 1 இல்.<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L வியாபாரம் இலத்திரனியல் (கடை) சொந்தம்<br>தொ.இ:B768 | பிறப்பு: 1987 இந்து (விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: அனுஷம் 4<br>கி.பா:69 செவ்: 7<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L ரெக்னிக்கல் ஒபிசர்<br>தொ.இ:G760 |
| பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவாதிரை- 4<br>கி.பா. 26.75<br>உயரம்: 5'7"<br>தகைமை/ தொழில்: A/L Hard ware (இன்சுரன்ஸ்)<br>தொ.இ:B771 | பிறப்பு: 1991 இந்து (விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா :22.5<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L பல்கலைக் கழக மாணவி<br>தொ.இ:G761 |
| பிறப்பு: 1976 இந்து (Do)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>கி.பா:20<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BBM பட்டதாரி (வியாபார முகாமைத்துவமாணி)<br>தொ.இ:B769 | பிறப்பு: 1978 இந்து (Ko)<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா :13<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BA (அரச வேலை)<br>தொ.இ:G762 |
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் -4<br>கி.பா:36.25<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L Civil Engineer Last year (postman)<br>தொ.இ:B772 | பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா :16.25 உயரம்: 4'11"<br>தகைமை/தொழில்: BIT முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ:G764 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மரக்கடத்தலை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

## மகஜரும் அனுப்பி வைப்பு

(மல்லாவி)

**வன்னி பெருநிலப்பரப்பில் சட்டவிரோதமாக காட்டு மரங்களைத் தறித்து கடத்துவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் அதை தடுத்து நிறுத்துமாறு வன்னி மாவட்ட பொது அமைப் புக்களின் பிரதிநிதிகளும் பொது மக்களும் தங்கள் பகுதி அரச அதிபருக்கும் ஜனாதிபதிக்கும் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.**



வன்னி பெருநிலப்பிரப்பில் மக்கள் மீள் குடியேற்றத்தின் பின்னர் வீட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பொழுது அவற்றிற்கு தேவையான மரங் களை அனுமதியின்றி தறிக்க முடியாத நிலை யில் சட்டவிரோதமாக அக்காட்டு மரங்களை தறித்து கடத்துவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து செல்வதை காணக் கூடிய தாகவுள்ளது.

கடந்த காலங்களில் இம் மரங்கள் பாது காக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போது அச்செயலைத் தடுத்து நிறுத்த எவரும் இல் லாத நிலைமையைத் தமக்கு சாதகமாக பயன் படுத்தும் சட்டவிரோதிகள் முல்லைத்தீவு, கிளி நொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள அடர்ந்த காடுகளில் பெறுமதி மிக்க பாலை, முதிரை, தேக்கு, கருங்காலி போன்ற வைரித்த மரங்கள் உள்ளிட்ட பல்வேறு வகை யான மரங்களை வெட்டி கடத்தி செல்கின் றனர்.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பகுதிகளிலும் மாட்டு எரு ஏற்றிய பார வூர்திக்குள் மறைத்துக் கொண்டு செல்லப் பட்ட மரக்குற்றிகளையும் பலகைகளையும் மிருசுவில் சோதனைச் சாவடியில் வைத்து பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இம்மரங்களைக் கடத்திய பாரவூர்திகள் முல்லை மாவட்ட நீதிமன்றத்தின் முன்னால் தற்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை முள்ளியவளை பகுதியில் குடியேற்றம் ஒன்றை புதிதாக அமைப்பதற் காக வனவள பாதுகாப்பு பிரிவினரால் வளர்க் கப்பட்ட தேக்கு மரங்களை பாரிய இயந்திரங்க ளின் உதவியோடு வெட்டி எடுத்துச் செல்லு கின்ற நிலை காணப்படுகின்றது.

எனவே வன்னியில் நடைபெறுகின்ற மரக்கடத்தல் நடவடிக்கைகளைக் தடுத்து நிறுத்துமாறு வன்னி மாவட்ட பொது அமை ப்புக்களின் பிரதிநிதிகளும் பொது மக்களும் மகஜர் ஒன்றை தங்கள் பகுதி அரச அதிபரு க்கும் ஜனாதிபதிக்கும் அனுப்பி வைத்துள் ளனர். (ம-15)

## சிறுவர், முதியோர், மாற்றாற்றல் உடையோர் தினவிழா

(குருமன்காடு)


செட்டிகுள பிரதேச செயலக மட்ட முதியோர் , சிறுவர் மற்றும் மாற்றாற்றல் உடையோர் தின விழாக்கள் பிரதேச செயலக முன்றலில் இன்று காலை மு.ப 9.30 மணியளவில் நடைபெறவுள்ளன.

பிரதேச செயலாளர் கமலதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக அரச அதிபர் திருமதி ச.மோகநாதனும் கௌரவ விருந்தினராக மாவட்ட முதி யோர் சங்கத்தலைவர் வைத்திய கலாநிதி கந்தையா இராமச்சந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசனும் மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் யோ . கென்னடி ஆகி யோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

முதியோர் சிறுவர்களின் கலை நிகழ்வு கள் , பரிசளிப்பு வைபவம் முதியோருக் கான கௌரவிப்பு என்பனவும் இதில் இடம்பெறவுள்ளன. (ம-250)




# உலக தபால் தினம் நேற்று அனுஷ்டிப்பு



(கிளிநொச்சி)

உலக தபால் தினம் நேற்று அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்பட்டது.

இதன் அடிப்படையில் கிளிநொச்சி தபால கத்தில் காலை 9 மணிக்கு உலகதபால் தினம் அஞ்சல் அதிபர் தெய்வேந்திரன் வேழவேந்தி ரன் தலைமையில் வெகு சிறப்பாக நடை பெற்றது.

அஞ்சல் அலுவலகத்தின் மூத்த உறுப்பி னர் கி.நடராஜாவால் அஞ்சல் கொடி ஏற்றி வைக்கப்பட்டதுடன் உதவித்தபால் அதிபர் வி.றெக்ஷன் சிறப்புரையையும் ஆற்றினார்.

பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறு வதற்கு வந்திருந்த பயனாளிகள், பொது மக்கள் உட்பட 200இற்கு மேற்பட்டோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் பயனாளிகளால் சில கோரிக் கைகள் முன் வைக்கப்பட்டன.

பொன்னகர், பாரதிபுரம், செல்வாநகர் ஆகிய தூர இடங்களில் இருந்து தாம் இந்த உதவிப் பணத்தை பெற வருவதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது.

எனவே பாரதிபுரம், செல்வாநகர் ஆகிய இடங்களில் உபதபாலகம் அமைத்து தருமாறு கேட்டுக் கொண்டனர்.

உரிய உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள் வதாக தபால் அதிபர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் காசுக்கட்டளை மூலம் அனுப்பும் பணம் உடனுக்குடன் சென்றடையக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அஞ்சல் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-254)

# துணுக்காய் கல்வி வலயத்திற்கு கணக்காளர் நியமனம்

திறைசேரியின் உத்தரவுக்கமைய வடக்கு மாகாண பிரதம செயலாளரால் செய்யப்பட்ட இடமாற்ற உத்தரவுக்கேற்ப துணுக்காய் கல்வி வலயத்திற்கு குருநாகலை சேர்ந்த ருவான் அத்தபத்து என்பவர் கணக்காளராக நேற்று புதன்கிழமை கடமையேற்றுள்ளார்.

முன்னர் இங்கு கடமையாற்றிய கந்தசாமி பார்த்தீபன் யாழ் கல்வி வலயத்திற்கு கணக் காளராக இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.


இதேவேளை துணுக்காய் கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப்பணிப்பளராக இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III ஐ சேர்ந்த குகதாசன் விக்கினரூபன் உதவிக் கல்வி பணிப்பாளராக கடந்த வாரம் கடமை யேற்றுள்ளார். (ம-15)

# கரிப்பட்டமுறிப்பு - கற்கிடங்கு கிராமத்திற்கு தனியார் பேருந்து சேவை அடுத்த வாரம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு - கற்கிடங்கு கிராமத்திற்கு எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் தனியார் பேருந்து சேவை இடம் பெறவுள்ளதாக முல்லை மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ச.கனகரத்தினம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக் கையில் கடந்த வாரம் முல்லை மாவட்ட அரச அதிபருடன் முல்லை மாவட்ட தனியார் பேரு ந்து உரிமையாளர் சங்கத்தினர் மேற்கொண்ட உரையாடலை அடுத்தே இச்செயற்பாடு நடை முறைப்படுத்தப்படவுள்ளது.



கடந்த 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற் றம் நடைபெற்றதன் பின்னர் எந்தவித போக் குவரத்து வசதிகளும் இல்லாது பின் தங்கிய கிராமமாக இருந்த மேற்படி கிராமங்களுக்கு இப்போக்குவரத்து வசதி பெரும் பயனாக அமையவுள்ளது.

இச்சேவை தினசரி காலை மாலை என இரண்டு தடவைகள் இடம்பெறவுள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு முதலமைச்சர் விக்கினேஸ்வரனுக்கு அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும்

## முன்னாள் பிரதியமைச்சர் வே. இராதாகிருஸ்ணன்

**(கொழும்பு)**

**தமிழ்மக்களின் அபிலாஷைகள் வடமாகாண சபை தேர்தல் முடிவுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சம உரிமைகளுடன் ஐக்கிய இலங்கைக்குள் வாழ வேண்டும் என்பது அனைத்து தமிழ் மக்களினதும் எதிர்பார்ப்பாகும். இதற்கு மதிப்பளித்து வட மாகாண முதலமைச்சராக பதவி ஏற்றுள்ள முன்னாள் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரனுக்கு அரசாங்கம் அனைத்து உதவி களையும் வழங்க வேண்டும் என்று முன்னாள் பிரதியமைச்சர் வே.இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.**

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரிவினைவாதத்தையோ, தனி நாட்டையோ தமிழ் மக்களோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ விரும்பவில்லை என்பது ஜனாதிபதி முன்னிலையில் வடமாகாண முதலமைச்சர் பதவி ஏற்ற போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே, வீண் இனவாதத்தை தூண்டாது அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச ஆகியோர் தமது அமைச்சுக்களால் முடிந்த உதவிகளை தமிழர்களுக்கு செய்ய முன்வர வேண்டும்.

வடமாகாண சபைத் தேர்தல் முடிவுகள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாரிய வெற்றியை உறுதிப்படுத்தியுள்ளன. இது வரவேற்கப்பட வேண்டிய விடயமும் ஆகும்.

முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி சி.வி.விக்கினேஸ்வரன் முதலமைச்சராக பதவியேற்றமையானது முக்கியமானதொரு விடயமாகும்.

சந்தேகத்திற்கு இடமின்றி அவரது தலைமைத்துவத்தின் கீழ் வட மாகாணம் பாரிய அபிவிருத்தியை அடையும். அத்தோடு பொதுமக்களின் வாழ்வாதாரம் பாரிய பிரச்சினைகளாக காணப்படும் மீள் குடியேற்றம் மற்றும் விதவைப் பெண்களின் விவாகரத்து போன்ற விடயங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டு தீர்வுகளும் எடுக்கப்படும்.

குறிப்பாக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட சி.வி. விக்னேஸ்வரனின் நிலைப்பாடும் அதற்கு பின்னரான அவர் வலியுறுத்திய விடயங்களும் முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டியவை ஆகும்.

அதாவது, தமிழ் மக்கள் தமது உரிமைகளுடன் வாழ விரும்புகின்றனர். அத்துடன் தமிழ் மொழி பாரம்பரியம்மிக்கதும் சமத்துவமிக்கதுமான மொழி என்பதால் அதனை பாதுகாக்கவும் கலாசார பாரம்பரிய தொன்மைகளை உணர்வு மூலமாக தமிழ் மக்கள் முன்னெடுப்பதற்கான அனைத்து உரிமைகளுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்பது அவரது விருப்பமாகும்.

ஆகவே, அரசாங்கம் இந்த விடயங்களுக்கு முக்கியத்துவம் அளித்து ஜனாதிபதி உள்ளிட்ட அரச பிரிவுகள் தேவையான அனைத்து உதவிகளையும் வடமாகாண முதலமைச்சருக்கு வழங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

### துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

*கொழும்பில் சம்பவம்*

கொழும்பில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இச் சம்பவத்தில் கொழும்பு தெமட்டகொட பேஸ்லைன் வீதியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கார் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்தவர்கள் மீதே இனந் தெரியாதோர் துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளனர். இதன்போது காரின் சாரதி காயங்களுக்குள்ளான நிலையில் மரணமடைந்துள்ளார்.

காரில் பயணித்த ஏனைய மூவரும் சம்பவத்தின் போது அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சம்பவத்தின் பின்னணி குறித்து விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

இதேவேளை நேற்றுமுன்தினம் கொழும்பு டி.ஆர்.விஜயவர்த்தன மாவத்தையில் வைத்து கடத்திச் செல்லப்பட்டதாக கூறப்பட்ட அமைச்சர் மேர்வின் சில்வாவின் அதிகாரிகள் இருவரும் கடுவெலமாலபே பகுதியில் வைத்து மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

### பொலிஸ் உத்தியோகத்தருக்கு 15 ஆண்டுகள் கடூழிய சிறை

14வயதான சிறுவன் ஒருவனை பாலியல் ரீதியாக கடுமையாக துன்புறுத்திய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு 15 ஆண்டு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஜோடி செருப்பைத் திருடிய குற்றத்துக்காக இச் சிறுவன் கைது செய்யப்பட்டிருந்தான்.

கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சிறுவனை கழிவறைக்கு அழைத்துச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் மிக மோசமான வகையில் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இச்சம்பவம் ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்ட காரணத்தினால் பொலிஸ் உத்தியோகத்தருக்கு பதுளை உயர் நீதிமன்றம் 15 ஆண்டு கடூழிய சிறைத் தண்டனை விதித்துள்ளது. குற்றச் செயலுக்காக 10 ஆயிரம் ரூபா அபராதமும் ஒரு இலட்சம் ரூபா நட்டஈடும் அவர் வழங்க வேண்டுமென நீதிமன்றம் அறிவித்துள்ளது. (அ-2)



இலங்கை இராணுவத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் தயா ரட்னாயக்கா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பூஜை வழிபாடுகளின்போது...

## வடக்கு முதலமைச்சரின் பதவிப் பிரமாணம் தேசிய ஐக்கியத்திற்கு சிறந்த அடையாளம்

*மேல்மாகாண சபையின் பிரதம கொறடா ரேணுக பெரேரா*

(கொழும்பு)

வடமாகாண முதலமைச்சரின் பதவிப்பிரமாணம் தேசிய ஐக்கியத்துக்கான சிறந்த அடையாளம் என மேல்மாகாண சபையின் ஆளுங் கட்சி பிரதம கொறடா ரேணுக பெரேரா தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண சபையின் கூட்டம் நேற்று முன்தினம் கூட்டப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாண முதலமைச்சரின் பதவிப் பிரமாணம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் நிலவிய போதிலும் வட மாகாண முதலமைச்சர் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டமை தேசிய ஐக்கியம் தொடர்பில் சிறந்த அடையாளமாகும்.

சர்வதேசமயமாக்கப்பட்ட வடக்கின் பிரச்சினையை தெற்கில் பேசக்கூடிய நிலையொன்று ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி நீட்டியுள்ள நட்புறவுக்கரங்கள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படல் வேண்டும்.

இப்பதவிப் பிரமாண நிகழ்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களும் கலந்துகொண்டனர். இக் கூட்டமைப்பினரிடையே பல்வேறு முரண்பாடுகள், கருத்து வேற்றுமைகள் இல்லாமல் இல்லை.

வடமாகாண முதலமைச்சர் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்தமையை மிகவும் சிறந்த செயலொன்றாகக் காட்ட முடியும். இந்த ஆரம்பம் சிறந்த தொடக்கமொன்றாக விளக்குகின்றது.

அவர்கள் கேட்பதையெல்லாம் எம்மால் கொடுக்க முடியாதிருக்கலாம். நாம் சொல்வதை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கவும் அவர்கள் விரும்பமாட்டார்கள்.

இனவாத ரீதியில் அரசியல் செய்தவர்கள் தோல்வியடைந் துள்ளனர். எதிர்காலத்தில் நாடு பற்றிய சிறந்த நோக்கை வடமேல், மத்திய மாகாண சபை தேர்தல்கள் எமக்கு காட்டியுள்ளன. வடக்கில் ஜனநாயகம் வென்றுவிக்கப்பட்டமை தொடர்பில் நாம் அனைவரும் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

ஜனாதிபதி நீட்டிய நேசக்கரங்கள் நீண்டகாலம் நிலைத்திருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

### மாத்தளை மனித எச்சங்கள் சீனாவுக்கு

மாத்தளை மனித எச்சங்கள் சீனாவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இதற்கான அனுமதியை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

மாத்தளை வைத்தியசாலையில் அண்மையில் பாரியளவில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.

இந்த மனித எலும்புக் கூடுகள் ஆய்வு செய்யப்படுவதற்காக சீன ஆய்வு கூடமொன்றுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

சடலங்கள் எப்போது புதைக்கப்பட்டன என்பது குறித்து ஆராய்வதற்காகவே இவை அனுப்பி வைக்கப்படவுள்ளன.

ரேடியோ கார்பன் தொழில் நுட்பத்தினூடாக இவ் எச்சங்கள் சீனாவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. இந்த மனித எச்சங்கள் 1986 ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரித்தானவை என இலங்கை ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர். (அ-2)

### இலங்கைத் தமிழர் பிரச்சினை இந்திய தேர்தலை பாதிக்காது

இலங்கைத் தமிழர் பிரச்சினை, இந்திய லோக் சபா தேர்தலை பாதிக்காது என காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் ஆந்திர பொறுப்பாளர் திருநாவுக்கரசர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் நலன்களை உறுதிப்படுத்த காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசாங்கம் முனைப்புக்களை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார். இலங்கை அரசாங்கத்துடன் இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு வீடமைப்பு, உட்கட்டுமான வசதிகள் என பல்வேறு வழிகளில் மத்திய அரசாங்கம் உதவிகளை வழங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மானின் புத்திசாலித்தனம்



ஒரு காட்டில் சில மான்கள் ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்து வந்தன. அவற்றிற்கு ஒரு தலைவன் உண்டு. அது தன் கூட்டத்தை, வரும் ஆபத்திலிருந்து காப்பாற்றி வந்தது.

ஒருநாள் ஒரு வேடன் மான்கள் இருக்குமிடத்திற்கு வந்தான். மற்ற வேடர்களைப் போல் அவன் புதர்களில் மறைந்திருந்து வேட்டையாடுவதில்லை. மரத்தின் உச்சியில் பரண் அமைத்தான். மான்களின் கண்களில் புலப்படாதபடி கிளைகளுக்கிடையே மறைந்து கொண்டான். உயரத்தில் இருந்துகொண்டு எளிதில் அவைகளை அம்பினால் எய்து கொன்றுவிட நினைத்தான்.

ஆனால், மான் கூட்டம் மரத்தடிக்கு வராமல் தொலைவில் இருப்பதைக் கண்டான். உச்சியிலிருந்த கனிகளைப் பறித்து அந்த மான்கள் நிற்கும் இடத்தருகே ஒவ்வொன்றாக எறிந்தான். பழங்கள் அருகில் விழுந்ததைக் கண்ட சில மான்கள் அவற்றை உண்ண ஆவலுடன் ஓடின. உடனே மான்களின் தலைவன் அந்தப் பழங்களை யாரும் உண்ணாதீர்கள். இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்று கூறித் தடுத்தது. உடனே அது மரத்தை மிகவும் உன்னிப்பாக கவனித்தது.

வேடன் மரத்தின் உச்சாணிக் கிளையில் மறைந்திருப்பதைக் கண்டது. மான்களின் தலைவன், தான் கண்டதை மற்ற மான்களுக்குக் கூறவில்லை. வேடன் இருந்த மரத்தைப் பார்த்து ஏ மரமே! இதுவரை உன் மரத்திலிருந்து பழங்கள் கீழ்நோக்கி நேராக விழுந்து வந்தன. இன்று மட்டும் மிகவும் வித்தியாசமாக ஏன் தொலை தூரத்தில் விழும்படி எறிகின்றாய்? மரங்களுக்குரிய இயல்புக்கு மாறாக இன்று நடந்துகொண்டாய். இனி மற்ற மரங்களில் கிடைக்கும் கனிகளைத்தான் உண்ண வேண்டும் என்று கூறிவிட்டு மற்ற மான்களுடன் காட்டிற்குள் ஓடி ஒளிந்தது.

வேடன், தன் அம்பை எய்து பார்த்தான். மரத்தைவிட்டு இறங்குவதற்குள் மான்கள் மின்னல் வேகத்தில் ஓடி மறைந்தன.

★★★★★★★★★★★★★★

## தந்திரமான காகம்

ஒரு காகம் காட்டிலிருந்த ஒரு பெரிய மரத்தின் உச்சியில் கூடுகட்டி, தனது குஞ்சுகளுடன் வசித்து வந்தது. அந்த மரத்தில் ஒரு புற்று உருவாயிற்று. அந்தப் புற்றில் நாகம் ஒன்று குடியேறியது. அதனைக் கண்ட காகம் மிகவும் பயந்து போனது. இனிமேல், இந்த மரத்தில் குஞ்சுகளுடனும் முட்டைகளுடனும் வாழ்வது ஆபத்து என்று கருதியது. அந்த நாகத்தை அந்த இடத்தை விட்டு விரட்ட அல்லது கொன்றுவிட என்ன வழி என்று மிகவும் சிந்தனை செய்தது.

ஒரு நரியைச் சந்தித்து ஆலோசனை கேட்டது. நாகபாம்பை நான் எதுவும் செய்ய முடியாது. நான் சொல்கிறபடி செய் என்று கூறிவிட்டுச் சென்றது. நரி கூறிய யோசனையை காகம் ஏற்றுக்கொண்டது. அதன்படி காகம் அரண்மனைக்குப் பறந்து சென்றது.

அரசனின் அறையில் இருந்து விலையுயர்ந்த முத்துமாலையை தனது அலகால் கொத்திக்கொண்டு பறந்து வந்தது.

அதனைக் கண்ட அரண்மனைக் காவலர்கள் ஆயுதங்களுடன் காகம் பறந்து செல்லும் திசையை நோக்கி விரட்டிக்கொண்டே ஓடி வந்தனர்.

பறந்து வந்த காகம் பாம்புப் புற்றின் உள்ளே முத்துமாலையைப் போட்டுவிட்டு பறந்து போய் அந்த மரத்தின் மேல் அமர்ந்து கொண்டது.

ஓடி வந்த காவலர்கள் முத்துமாலையை எடுப்பதற்குப் புற்றைத் தோண்டினர். அப்போது நாகபாம்பு சீறிக்கொண்டு வெளியே வந்தது.

அதனைக் கண்ட காவலர்கள் கண்டந்துண்டமாக வெட்டிக் கொன்று போட்டுவிட்டு அந்த முத்துமாலையை எடுத்துக் கொண்டு அரண்மனைக்குத் திரும்பினர்.



அதைக் கண்ட காகம், அச்சம் ஏதுமின்றி தன் குஞ்சுகளுடன் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வாழலாம் என எண்ணி பெருமூச்சு விட்டது.

## 10.2013 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 680– முகமது நபியின் பேரன் ஷியா இமாம் உசேன் பின் அலி, காலிப் முதலாம் யாசிட்டின் படையினரால் கழுத்து வெட்டிக்கொலை செய்யப்பட்டார். ஷியா முஸ்லிம்களினால் இந்நாள் ஆராஹ் என அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- 1868– கியூபாவின் முதலாவது விடுதலைப் பிரதேசம் லாடெமஹாகுவா பகுதியில் கார்லோஸ் செஸ்பெடஸ்எண்பவர்தலைமையில்அறிவிக்கப்பட்டது.
- 1911– வூச்சாங் எழுச்சி ஆரம்பமாகியது. இது சிங் வம்சத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சீனக் குடியரசு உருவாவதற்கு வழிவகுத்தது.
- 1916– வட இலங்கை அமெரிக்க மிஷன் தனது நூற்றாண்டு நிறைவை யாழ்ப்பாணம், பட்டிக்கோட்டா செமினறியில் கொண்டாடியது.
- 1942– சோவியத் ஒன்றியம் ஆஸ்திரேலியாவுடன் தூதரக உறவை ஏற்படுத்தியது.
- 1944– இரண்டாம் உலகப்போர்: 800 ஜிப்சி சிறுவர்கள் அவுஸ்விச் வதை முகாமில் பாடுகொலை செய்யப்பட்டனர்.
- 1945– போருக்குப் பின்னரான் சீனா குறித்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் குவோமின்டாங்கும் உடன்பாட்டிற்கு வந்தனர். இது இரட்டை பத்து உடன்பாடு என அழைக்கப்படுகிறது.
- 1949– விடுதலை பெற்ற இலங்கையின் புதிய இராணுவம் உருவாக்கப்பட்டது.
- 1957– ஐக்கிய இராச்சியம், கம்பறியா என்ற இடத்தில் உலகின் முதலாவது அணுக்கரு உலை விபத்து நிகழ்ந்தது.
- 1967– விண்வெளி தொடர்பாக அறுபதுக்கும் அதிகமானநாடுகள்ஜனவரி 27 ஆம்நாள்கையெழுத்திட்ட உடன்பாடு அமுல்படுத்தப்பட்டது.
- 1970– பீஜி, ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1970– மொண்ட்றியால் நகரில் கியூபெக்கின் உதவிப் பிரதமரும் தொழிலமைச்சரும் கியூபெக் விடுதலை முன்னணி தீவிரவாதிகளினால் கடத்தப்பட்டனர்.
- 1971– விற்பனை செய்யப்பட்டு அமெரிக்காவுக்குக் கொண்டுபோகப்பட்ட லண்டன் பாலம் அரிசோனாவின் லேக் ஹவாசு நகரில் மீள அமைக்கப்பட்டது.
- 1991– தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் மாவட்டம் உருவாக் கப்பட்டது.

**பிறப்புக்கள்**

- 1888– நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை (இ.1972)
- 1906–ஆர்.கே.நாராயண், இந்திய எழுத்தாளர் (பி.2001)
- 1908– கே.பி.சுந்தராம்பாள், தமிழிசைப்பாடகி, நாடக, திரைப்பட நடிகை (இ.1980)
- 1913– கிளோட் சைமன், நோபல் பரிசுபெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ.2005)
- 1930– ஹரோல்ட் பிண்டர், நோபல் பரிசு பெற்ற ஆங்கில எழுத்தாளர் (இ.2008)
- 1936– கெரார்டு எர்ட்டில், ஜெர்மனிய வேதியியல் அறிஞர்

**இறப்புக்கள்**

- 1659–ஏபெல் டாஸ்மான், டச்சு கடல் ஆராச்சியாளர், நாடுகாண் பயணி (பி.1603)
- 1973–பாபநாசம் சிவன், கர்நாடக இசை, தமிழிசை அறிஞர் (பி.1890)
- 1974–மு.வரதராசன், தமிழறிஞர் (பி.1912)
- 2000– சிறிமாவோ பண்டாரநாயக்கா, இலங்கையின் பிரதம மந்திரி, உலகின் முதல் பெண் பிரதமர் (பி.1916)

**சிறப்புநாள்**

உலக மரணதண்டனை எதிர்ப்பு தினம்

### மு.வரதராசன்



மு.வ.எனச் சுருக்கமாக அழைக்கப்பட்ட மு வரதராசன் 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதி பிறந்தார்.

இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரி, சென்னை பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழத்துறைத் தலைமைப் பொறுப்பில் இருந்ததுடன், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றினார்

1944 இல் தமிழ் வினைச் சொற்களின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் ஆராய்ந்து எம்.ஓ.எல் பட்டத்தையும், 1948 இல் சென்னை பல்கலைக் கழகத்தின் மூலம் சங்க இலக்கியத்தில் இயற்கை என்ற தலைப் பில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டத்தையும் பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் மூலம் முதல் முதலாக தமிழில் முனைவர் பட்டம் பெற்ற பெருமைக்குரியவர் மு.வ. என்பது குறிப்பிடத்தக்கது.

1972 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஊஸ்டர் கல்லூரி இவருக்கு இலக்கியப் பேரறிஞர் என்ற சிறப்புப் பட்டத்தை நல்கிப் பெருமைப்படுத்தியது. அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் இச் சிறப்புப் பட்டம்பெற்ற முதல் தமிழறிஞர் மு.வ. அவர்களே.

பல பீடங்கள், ஆணைக்குழுக்கள், பல்கலைக்கழகங்கள், மன்றங்கள், சங்கங்கள் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றில் அங்கம் வகித்ததோடு அனைத்திலும் தன்னுடைய பணி முத்திரைகளைப் பதித்து தனிச் சிறப்புகளுக்குச் சொந்தக்காரர் மு.வ. அவர்கள்.

நாவல்கள், சிறுகதைகள், சிறுவர் இலக்கியம், நாடகங்கள், இலக்கணம், கட்டுரைகள், தமிழ் இலக்கிய நூல்கள், பயணக் கட்டுரை, முன்னுரைகள், மொழிபெயர்ப்பு, மேற்கோள்கள் என 91 நூல்களை தமிழுக்குத் தந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சக்தி மகத்தான சக்தி



...தன்னை உணர வேண்டுமானால் உலகியல் வாழ்க்கையில் இருந்துவிடுபட்டாக வேண்டுமா? இந்தக் கேள்வியைப் பலரும் கேட்கிறார்கள்.

உலகியல் வாழ்க்கை, லௌகீக வாழ்க்கை என்று எதைக் குறிப்பிடுகிறோம்?

நமது உணவை நாமே சமைக்கிறோம். நம் ஆடைகளை நாமே தூய்மை செய்கிறோம். இவையெல்லாம் உலகியலின் அங்கங்கள்தான். இவற்றையெல்லாம் செய்யாமல் இங்கே வழ இயலாது.

ஒவ்வொரு மனிதரும் உலகியலில் தான் எந்த விதத்தில் ஈடுபட வேண்டுமென்பதை சுய விருப்பத்தின் பேரில் தானாகவே தீர்மானிக்கிறார்கள். சிலர் அரசியலில் இருக்கிறார்கள். சிலர் அலுவலகங்களில் பணிபுரிகிறார்கள். சிலர் தொழிலகங்களை நடத்துகிறார்கள். சிலர் தரை பொறுக்குகிறார்கள். இவர்கள் எல்லோருமே உலகியலில் இருப்பவர்கள்தான். எனவே, உலகியலில் இருந்துவிடுபடுவது அவ்வளவு எளிதான விடயமல்ல.

உலகியலில் என்ன செய்ய விரும்புகிறோம். எந்த அளவுக்கு அதனை செய்வது என்பதெல்லாம் ஒவ்வொரு தனி மனிதரும் தன் விருப்பு வெறுப்புக்கேற்ப தேர்வு செய்து கொள்ள வேண்டியதுதான். அது ஒவ்வொரு தனி மனிதருக்கும் உள்ள உரிமையும் கூட.

இதில் சிலர் தானாக எதையும் செய்வதில்லை. பிறர் செய்வதையெல்லாம் பார்த்து அதுபோல் செய்ய முற்படுகிறார்கள். தான் என்ன செய்ய வேண்டும் என்கிற தெளிவோ, விழிப்புணர்வோ அவர்களிடமில்லை.

இத்தகைய ஒரு சிலர்தான், ஆன்மீக வழியில் செல்பவர்களைப் பார்த்து இவர்கள் பொறுப்புக்களை உதறிவிட்டுப் போகிறார்கள். உலகிற்காக வாழாமல் தனக்காக வாழ்கிறார்கள் என்று புகார் சொல்கிறார்கள்.



வீட்டிலும் அலுவலகத்திலும் மட்டுமே இயங்குபவர்கள தனக்காக வாழ்பவர்கள். அவர்களுக்குத்தான் உலக நலனில் அக்கறையில்லை. தனது சொந்த நலனுக்காக என்று வந்துவிட்டு அந்த வலையிலிருந்து விடுபட இயலாமல் தவிப்பவர்கள். ஆன்மீகப் பாதையில் செல்பவர்களைப் பார்த்து வாழத் தெரியாதவர்கள், உலகத்தைவிட்டு ஒதுங்கிவிட்டவர்கள என்று சொல்லத் தொடங்குகிறார்கள்.

ஒரு குடிகாரன் இருந்தான் முழு போதையில் தள்ளாடியபடியே ஒரு பேருந்துக்குள் ஏறியவன், எல்லாம்

## ஆன்மீகம் 03

கால்களையும் மிதித்து பெட்டிகளைக் கலைத்து தட்டுத்தடுமாறி ஒரு கிழவியின் மீது விழுந்தான். கோபம் கொண்ட அந்தக் கிழவி நீ நரகத்திற்குப் போவாய் என்று சபித்தாள். உடனே அந்தக் குடிகாரன் அப்படியானால் நான் தவறான பேருந்தில் ஏறிவிட்டேன் என்று சொல்லிவிட்டுக் கீழே இறங்க ஆரம்பித்தான்.

எந்தப் பேருந்து சரியானது, எது தவறானது என்பதெல்லாம் குடிகாரர்களுக்குத் தெரியாது. தங்கள் வாழ்வை விதம் விதமான சிக்கல்களுக்கு ஆட்படுத்திக்கொண்டு சூழ்நிலைக் கைதிகளாய் வாழ்பவர் கள், தங்கள் வாழ்வை திறம்பட நிர்வகித்து, விரும்பும் திசையில் திட்டமிட்டு பயணம் செய்பவர்களைப் பார்த்து இவர்கள் தவறானவர்கள என்று பேசுகிறார்கள். (தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# 1901-1976 வரை பறிபோனது, 15 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் நிலம்

## 1976- 2009 வரை ஒரு அங்குலம்கூட பறிக்கப்படவில்லை



**ஒரு சிறுபான்மையும் பெரும்பான்மையும் வாழ்கிற நாட்டில் பெரும்பான்மை வாழ்கிற நிலத்தில் சிறுபான்மையினர் குடியேறினாலும், சிறுபான்மை வாழ்கிற நிலத்தில் பெரும்பான்மை குடியேறினாலும் அங்கு அழித்தொடுக்கப்படுவது சிறுபான்மை மக்கள்தான்- இனக்கலப்பில் கரைவது சிறுபான்மை மக்கள்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு பெரிய குடம் நிறைய தண்ணீர். அதில் ஒரு குவளைப் பாலை விடுகிறோம். பால் தண்ணீராகுமே தவிர தண்ணீர் பாலாகாது. ஏனென்றால் பெரும்பான்மையாக இருப்பது தண்ணீர். சிறுபான்மையாக இருப்பது பால். பால் தண்ணீராகுமே தவிர- தண்ணீர் பாலாகாது.**

கேள்வி:- வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழ்விடம் என்று மட்டுமே இந்திய- இலங்கை ஒப்பந்தம் பேசுகிறது. பாரம்பரியத் தாயகம் என்று அது கூறவில்லை. தவிரவும், வடக்கோடு நிரந்தரமாக இணைந்திருப்பதா என்பதை கிழக்கு மட்டுமே பொது வாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கும் என்று தமிழர் தாயகக் கோட்பாட்டை நிராகரிக்கும் பொறிமுறையை இந்த இந்திய- இலங்கை ஒப்பந்தம் கொண்டிருக்கிறது. கிழக்கு மாகாண நிலைமையை நன்கு அறிந்தவர் என்ற நிலையில் இது குறித்து தங்கள் கருத்தைப் பதிவு செய்வீர்களா?

பதில்:- இணைந்திருப்பதா இல்லையா என்பதை முதலில் அந்த மண்ணினுடைய வரலாறுதான் முடிவு செய்கிறது. அது தமிழர்களுடைய தாயகம். அதை உடைப்பதற்கும், பிரிப்பதற்கும் இவர்கள் யார்? நான் கேட்கிறேன். அவர்களுடைய சொந்த மண். அந்த மண்ணைவிட்டு அத்தனை தமிழர்களும் வெளியே போக நேர்ந்தாலும் அந்த மண் தமிழர்களுடைய மண்தான். யூதர்கள் இஸ்ரேலை விட்டு உலகெங்கும் சிதறி ஓடினார்கள். அந்தமண்ணில்எந்தயூதனும்இருக்கவில்லையே. அவர் வந்து இஸ்ரேலை அமைத்த போது அந்த மண் அவனுடைய தாயகமாயிற்று. வெற்று மணல்வெளியாய் கிடந்த மணற்பரப்பு யூதர்களுடைய மண்ணாகியது. அது அவனுடைய தாயகம். அவனுடைய தாயகத்தை பிரிக்க வேண்டுமென்றோ, சிதைக்கவேண்டுமென்றோ, இன்னொருவனால் ஆக்கிரமிக்கப்பட வேண்டுமென்றோ, இன்னொருவரிடம் ஒப்படைக்க வேண்டுமென்றோ சொல்வதற்கு எவனுக்கும் உரிமை கிடையாது.

தமிழர் தாயகத்தில் (தமிழீழத்தில்) வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கிற தமிழர்கள் ஒரே தமிழினம். நான் தொடக்கத்தில் சொன்னதைப் போல் முதலில் கிழக்கையும் வடக்கையும் மாகாணங்களாகப் பிரித்து, இரண்டாவதாக சிங்களக் குடியேற்றத்தால் கிழக்கைச் சிங்களமயமாக்கி, மூன்றாவதாக இன்று கிழக்கு மாகாணமக்கள் முடிவெடுத்து வடக்கிலிருந்து பிரிவது என்பதற்கு இந்த 13-வது சட்டதிருத்தம் வழிவகை செய்கிறது. அதனால்தான் நான் தொடக்கத்தில் சொன்னேன்:- It's not a part of Sri Lankan Constitution. It's a part of Sri Lankan Conspiracy . இது தான் எனது கருத்தாகும்.

கேள்வி:- கிழக்கில் சிங்களக் குடியேற்றத்தை அதிகரித்து, முஸ்லிம்களை தமிழர்களின் எதிரிகளாக்கி, மாவட்ட எல்லைகளைத் தனக்கேற்ற போக்கில் மாற்றியமைத்து, கிழக்கை வடக்கில் இருந்து நிரந்தரமாகக் பிரிக்கும் பொதுவாக்கெடுப்பைச் சிறீலங்க அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் போக்கை பல வருடங்களாகக் கையாண்டு வந்திருக்கிறது. எனவே, சிங்களக் குடியேற்றவாதிகள் தமிழ்த் தேசத்தின் இறைமைக் குட்பட்ட விவகாரங்களில் வாக்களிக்கும் உரிமையை எந்த வருடத்தோடு மட்டுப்படுத்த வேண்டும். அல்லது இது தொடர்பாகத் தமிழர் தரப்பு எந்த வகையிலான நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். (மகாவலித் திட்டம் அல்லது கல்லோயாத் திட்டத்திற்குப் பின்னரான குடியேற்றங்களா?)

பதில்:- ஒரு பொதுவாக்கெடுப்பு வந்தால் தமிழர் தாயகப் பகுதியில் (தமிழீழத்தில்) யார் வாக்களிக்கலாம்? தமிழர் தாயகப் பகுதியில் உள்ள சிங்களவர்கள் வாக்களிக்கலாமா? எந்தக் காலத்திற்குப் பின்பு அங்கு குடியேறியவர்கள் வாக்களிக்கலாம்? என்றெல்லாம் ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. நான் முதலில் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்கென்று ஒரு கருத்துண்டு. இந்திய விடுதலைப்போரில் கடைசிக் கட்டம் Quit India Movement தான். வெள்ளையனே வெளியேறு இயக்கம்தான். இந்தியாவை விட்டு வெளியேறு இதுதான் இந்திய விடுதலைப் போரில் காந்தியடிகள் கடைசியாகக் கையிலெடுத்த ஆயுதம். அதைப்போன்று தமிழீழ விடுதலைப் போரிலும் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அழுத்தமாகவும் குறிப்பிட விரும்புகிறேன். The Last Stage of our Struggle also should be quit EELAM Movemont எங்களுடைய விடுதலைப் போராட்டத்திலும் கடைசிக் கட்டம் தமிழர் தாயகத்தை (தமிழீழத்தில்) விட்டு வெளியேறு சிங்களவனே, என்பதுதான். அதுதான் எங்களின் விடுதலைப் போரின் கடைசிக் கட்டமாக இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

என்னைப்பொறுத்தவரை மாகாணமாகப் பிரிக்கப்பட்ட காலத்தில் சிங்களத்தோடு இணைக்கப்பட்ட மாகாணங்கள்- அதுகூட இருக்கட்டும். பின்னால் பார்த்துக் கொள்ளலாம். ஆனால், 1948க்குப்பின்னர் சிங்களவர்களைத்திட்டமிட்டு சிங்கள அரசு தமிழர் தாயகப் பகுதியில் (தமிழீழத்தில்) குடியேற்றி நம்முடைய மண்ணைக் கொள்ளையடித்ததே- வன்பறிப்பு செய்ததே அத்தனை சிங்களவர்களும் The are aggressors அவர்கள் வன்பறிப்பாளர்கள், ஆக்கிரமிப்பாளர்கள். தமிழர் தாயக மண்ணில் குடிகொண்டிருக்கின்ற Occopieed Army வலுகட்டாயமாக எமது மண்ணில் குடிகொண்டிருக்கின்ற- நிலைகொண்டிருக்கின்ற சிங்களப் படை வெறியர்களுக்கும் தமிழர் தாயக மண்ணில் 48 க்குப் பின்னர் குடியேறிய சிங்களக் குடியேற்றவாதிகளுக்கும்நான்எந்தவேறுபாட்டையும்காணவில்லை. அவர்களிடம்ஆயுதம்இருக்கிறது. இவர்களிடம் ஆயுதம் இல்லை என்ற வேறுபாட்டைத் தவிர, இருவருமே தமிழர் தாயக மக்களை அழித்தொழிக்க- அந்த மண்ணை முற்றாகப் பிரித்தெடுக்க- சிங்களமயமாக்க- தமிழர் தாயக மண்ணில் குடியேறியவர்கள்தான்.

ஆகவே, தமிழர் தாயகத்தை விட்டு சிங்களப் படைகள் - All the Sinhala Forces should be Withdrawn from EELAM எடுக்கப்பட வேண்டும் என்கிறார்களே அதுவல்ல- அந்த மண்ணில் குடியேறிய அனைத்துச் சிங்களவர்களும் தமிழர் தாயகத்தை விட்டு வெளியேற வேண்டும்.

இன்னொன்றை நான் சொல்லிக்கொள்வேன். இந்த வேளையில் சிங்கள ஆட்சியாளர்கள் சொல்கின்ற ஒரு கருத்துண்டு. அவர்கள், கொழும்பில்- சிங்கள சிறிலங்காவில்- தமிழர்கள் கடை வைத்திருக்கிறார்கள், வீடுகள் வைத்திருக்கிறார்கள். குடியேறியிருக்கிறார்கள். சிங்களவர்கள் தமிழர் தாயகமண்ணில் குடியேறுவதில் என்ன தவறு? என்று கேட்கிறார்கள் இது கொடுமையான வாதம். திட்டமிட்டு முன்வைக்கப்படுகிற ஒரு பெரிய சூழ்ச்சி என்பதை நான் வெளிப்படுத்தியாக வேண்டும்.

ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு சிறுபான்மையும் பெரும்பான்மையும் வாழ்கிற நாட்டில் பெரும்பான்மை வாழ்கிற நிலத்தில் சிறுபான்மையினர் குடியேறினாலும், சிறுபான்மை வாழ்கிற நிலத்தில் பெரும்பான்மை குடியேறினாலும் அங்கு அழித்தொடுக்கப்படுவது சிறுபான்மை மக்கள்தான்- இனக்கலப்பில் கரைவது சிறுபான்மை மக்கள்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு பெரிய குடம் நிறைய தண்ணீர். அதில் ஒரு குவளைப் பாலை விடுகிறோம். பால்தண்ணீராகுமேதவிரதண்ணீர்பாலாகாது. ஏனென்றால் பெரும்பான்மையாக இருப்பது தண்ணீர். சிறுபான்மையாக இருப்பது பால். பால் தண்ணீராகுமே தவிர- தண்ணீர் பாலாகாது. அது போன்றுதான் ஒரு பெரும்பான்மையும் ஒரு சிறுபான்மையும் வாழ்கிற மண்ணில் சிறுபான்மைத் தமிழர்கள் கொழும்பில் வாழ்ந்தாலும் இவர்கள்தான் சிங்களவர்களாக மாறுகிறார்கள்.

சிங்கள சிறிலங்காவில் வாழ்கிற சிங்களவர்கள் தமிழர் தாயகத்தில் குடியேறினாலும் தமிழர்கள்தான் சிங்களவர்களாக மாறுகிறார்கள். இதைத்தமிழ் மக்கள் உணர்ந்து தாயகத்தைப் பாதுகாக்க தம்மால் ஆன அனைத்தையும் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமலேஸ்சர்மா இலங்கையை காப்பாற்றி வருகின்றார்

## கனேடிய பிரதிநிதி ஹக்சேகல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்பரின் தீர்மானத்திற்கு மதிப்பளிப்பதாக பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஸ்சர்மா தெரிவித்துள்ளார்.**

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்கப் போவதில்லை என கனேடிய பிரதமர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். இந்தத் தீர்மானத்தை நான் மதிக்கிறேன்.

அமர்வுகளில் பங்கேற்பது குறித்து தீர்மானம் எடுக்கும் உரிமை ஒவ்வொரு உறுப்பு நாடுகளுக்கும் காணப்படுகின்றது. அதில் தலையீடு செய்யமுடியாது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் மிக முக்கியமான உறுப்பு நாடுகளில் கனடாவும் ஒன்று.

குறித்த அமைப்பின் முன்னேற்றத்திற்காக கனடா முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டில் போர்ட் ஒப்ஸ்பெய்னில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை இலங்கையில் நடத்துவது என அனைத்து உறுப்பு நாடுகளும் கூட்டாக தீர்மானித்ததாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஸ்சர்மா பக்கச்சார்பாக செயற்படுகின்றார் என கனடா குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கையில் பாரியளவில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வரும் நிலையில்,

இவற்றுக்கு எதிராக குரல் கொடுக்காது, இலங்கை அரசாங்கத்தை கமலேஸ்சர்மா காப்பாற்றி வருவதாக பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கனேடிய பிரதிநிதி ஹக்சேகல் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் சகல பிழைகளையும் சர்மா நியாயப்படுத்தி வருவதாகவும் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் அமர்வுகள் நடத்தப்படாதிருந்தால் உறுப்பு நாடுகள் இலங்கையின் உறுப்புரிமையை சில காலங்களுக்கு முன்னதாகவே இரத்து செய்திருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இயற்பியலுக்கான நோபல் பரிசு இருவருக்கு

(லண்டன்)

இயற்பியலுக்கான நோபல் பரிசு இருவருக்கு வழங்கப்பட்டது.

இதன்படி ஹிக்ஸ்போசன் கொள்கை பற்றிய ஆராய்ச்சிக்காக இரு விஞ்ஞானிகளுக்கு இந்த வருடத்துக்கான இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த பீட்டர் ஹிக்ஸ் மற்றும் பெல்ஜியத்தைச் சேர்ந்த பிரான்ஸுவா எங்கிலர் ஆகிய இருவருக்குமே இந்தப் பரிசு வழங்கப்பட்டது.

பிரபஞ்சத்தின் அடிப்படை மூலக்கூறுகளுக்கு ஏன் எடை உள்ளது என்பது குறித்து விளக்குவதற்கான ஒரு பொறிமுறையை 1960 ஆம் ஆண்டில் பிரேரித்த பல பௌதீக விஞ்ஞானிகளில் இவர்களும் அடங்குவார்கள்.

இறுதியாக சுவிட்சர்லாந்தில் சேர்ன் என்னும் இடத்தில் அணு மோதலுக்குக்கான பெரிய பரிசோதனைக் கூடத்தில் 2012 ஆம் ஆண்டில் கண்டு பிடிக்கப்பட்ட ஹிக்ஸ் போசன் (கடவுள்) துகள்களை அந்த பொறிமுறைதான் முதன் முதலில் எதிர்வுகூறியிருந்தது. (அ-2)

## கரப்பந்தாட்ட

### மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை நவம்பரில்

(யாழ்ப்பாணம்)

கரப்பந்தாட்ட தேசிய மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெற இருப்பதால் இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் தங்களை இலங்கை கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தில் அங்கத்தவராக இணைத்துக் கொள்ளல் வேண்டும் என யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் கி.மனோகரன் அறிவித்துள்ளார்.

எனவே, அதற்கான விண்ணப்பங்களை கி.மனோகரன் 186/26, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். அல்லது ந.சுதேஸ்குமார் 47, அராலி வீதி, சங்கானை அல்லது அ.குமாரசிவம்லிங்கம் புடைவையகம், 18 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரி களில் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ)

# 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் இணக்கப்பாடு ஏற்பட வேண்டும்

## வெளிவிவகார அமைச்சர் குர்ஷித் தெரிவிப்பு





(யாழ்ப்பாணம்)

மாகாண சபையினால் கிடைக்கும் பயன்களை வடக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களும் அனுபவிக்க வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த அவர், யாழ்.ரில்ஹோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சந்தர்ப்பத்தில் இலங்கை அரசாங்கத்துடன் பல உடன் படிக்கைகளைச் செய்துள்ளேன். குறிப்பாக சம்பூர் அனல்மின் நிலையம் தொடர்பான உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திற்கு உட்பட்டதாக சம்பூர் அனல்மின் நிலையம் இருந்தாலும் வடக்கு மக்க ளுக்கும் இதனால் பயன் பெறுவார்கள்.

இவ்வாறான உடன்படிக்கைகளும் அபிவிருத்தித் திட்டங்களும் இலங்கையில் இனங்களுக்கிடையில் மீள் இணக்கத்தினையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தும்.

மேலும் வடக்கு மாகாண சபைக்கு மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தி தெரிவுசெய்துள்ள முதலமைச்சர் ஊடாக தமிழர்களின் விருப்பங்களும் அபிலாஷைகளும் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையுள்ளது. அதற்கு இந்தியா அனுசரணை வழங்கும்.

மேலும் 13 ஆவது திருத்தச் சட்டம் மூலம் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும் என்று கூறியபோது கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தமது கைகளைத் தட்டி ஆரவாரப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# கச்சதீவை வர்த்தக நிலையமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்

(கொழும்பு)

இலங்கை மக்களும், தமிழக மக்களும் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்தும் வகையில் கச்சதீவு வர்த்தக நிலையமாக மாற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இந்திய வர்த்தகத்துறை அமைச்சர் எம்.சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான பேச்சுவார்த்தைகளும் தற்போது இடம்பெற்றுவருவதாக அவர் தெரிவித்தார்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் தாக்கப்படுகின்ற சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கோரியுள்ளது.

பிரதமர் மன்மோகன்சிங்கிடம் இக் கோரிக்கையை திராவிட முன்னேற்றக்கழக தலைவர் விடுத்துள்ளார்.

இதனையே தமிழக மீனவர்களும் எதிர்பார்ப்பதாக கருணாநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறுவதை ஆதாரபூர்வமாக காட்ட முடியும் என்று இலங்கையின் வெளியுறவு அமைச்சு கூறுகிறது.

அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அனுமுகம, இது தொடர்பில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

நாள்தோறும் ஆயிரக்கணக்கான இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக்கின்றனர்.

இது புதிய விடயம் அல்ல என்றபோதிலும் அது தொடர்பில் இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சருடன் பேச்சு நடத்தப்படுவதாகவும் அனுமுகம குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# விசா வழங்கும் நடைமுறை விதியை தளர்த்தியது இந்தியா

(சென்னை)

சுற்றுலாப் பயணிகளுக்கு விசா வழங்குவதில் இந்தியா சில விதிகளை தளர்த்தியிருக்கிறது.

இதற்கமைய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், அவுஸ்திரே லியா, சீனா போன்ற 40 நாடுகளைச் சேர்ந்த பிரஜைகளுக்கு பொருந்தும் வகையிலேயே சுற்றுலாப் பயணிகளுக்கு விசா வழங்குவதில் இந்திய அரசு சில விதிகளைத் தளர்த்தியிருக்கிறது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, சீனா போன்ற 40 நாடுகளைச் சேர்ந்த பிரஜைகள் இந்தியாவுக்கு சுற்றுலா விசா பெற அவர்களின் நாடுகளிலுள்ள இந்தியத் தூதரகங்களை அணுகாமலேயே, இணையத்தின் மூலம் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்பிவிட்டு, இந்தியாவுக்கு வந்து சேர்ந்தவுடன், விமான நிலையத்தில் அவர்களுக்கு விசா வழங்கப்படும் என்று இந்திய அரசு அறிவித்திருக்கிறது.

இந்த அறிவிப்பில் தெற்காசிய நாடுகள் எதுவும் சேர்க்கப்படவில்லை.

ஆனால், உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள 60 வயதுக்கு மேற்பட்ட அனைத்து சுற்றுலா பயணிகளுக்கும் விமான நிலையத்தில் வந்து சேர்ந்தவுடன் விசா வழங்கும் வசதி தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-2)

# பால்மா விலையை அதிகரித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

தமது சட்டரீதியான அனுமதியின்றி, பால்மா விலையை அதிகரிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

பால்மா விலை அதிகரிப்பு தொடர்பில் அந்தந்த நிறுவனங்கள் அனுமதி கோரியிருந்த போதிலும் இதுவரை அனுமதி அளிக்கப்படவில்லை என நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமிமஸ்ருக் தெரிவிக்கிறார்.

சட்டவிரோதமாக பால்மா விலையை அதிகரிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

பால்மா விலை குறித்து நேற்று முதல் சோதனை ஆரம்பமாகியுள்ளதாக அவர் கூறினார்.

ஒரு கிலோ கிராம் பால்மா பைக்கற்றின் கட்டுப்பாட்டு விலை 810 ரூபாவாகவும் 400 கிராம் பால்மா பைக்கற் 325 ரூபாவாகவும் இலங்கையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

### இலங்கையில் பகுதியளவிலேயே இணைய சுதந்திரம்

(கொழும்பு)

இலங்கையில் பகுதியளவில் இணைய சுதந்திரம் காணப்படுவதாக அமெரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் ப்ரீடம் ஹவுஸ் அமைப்பு அறிவித்துள்ளது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் பகுதியளவில் இணைய சுதந்திரம் காணப்படுகின்றது என அது தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான், சவுதி அரேபியா, ஈரான், மியன்மார் உள்ளிட்ட 14 நாடுகளில் முற்று முழுதாகவே இணைய சுதந்திரம் மறுக்கப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும் ஐஸ்லாந்து, அமெரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட 17 நாடுகளில் பூரண இணைய சுதந்தரம் காணப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிப் பொலிஸ்மா அதிபரை நியமிக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

**கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம் ஆகிய இடங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் 2013 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நியமிக்கப்படாமையால் மேற்குறித்த இடங்களில் குற்றச் செயல்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

மேற்குறித்த இடங்களில் கடமையாற்றிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் கடந்த 2013 ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்று சென்றதன் பின்னர் அவ்விடங்களுக்குப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படவில்லை.

முல்லை மாவட்டத்தில் 84 சிவில் பாதுகாப்பு குழுக்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 95 சிவில் பாதுகாப்பு குழுக்களும் உள்ள நிலையில் இச் சிவில் பாதுகாப்பு குழுக்களை மாதத்திற்கு ஒரு தடவை பிரதிப் பொலிஸ்மா அதிபர் மாவட்ட செயலகத்தில் சந்தித்து சமாதான நல்லிணக்கத்திற்கான கலந்துரையாடலை நடத்துவது. வழக்கம் ஆனால் தற்பொழுது பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்ப டாமையால் அச்சந்திப்பு இடம்பெறுவதில்லை. 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தில் இருந்து 2013 ஆம் ஆண்டு மாசி மாதம் வரை இப்பகுதியில் குறைந்து காணப்பட்ட குற்றச் செயல்கள் தற்போது அதிகரித்து காணப்படுகின்றன.

தற்போது வவுனியா மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரே இங்கு பதில் கடமை புரிகின்றார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படாமையால் சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாடசாலை மாணவர்கள் இடைவிலகல், களவு, குடும்ப வன்முறை, மரம் கடத்தல், கசிப்பு உற்பத்தி, கலாசார சீரழிவு, சட்டவிரோத மணல் அகழ்வு ஆகிய குற்றச் செயல்கள் இடம்பெற்று நீதிமன்றங்கள் வரை செல்கின்ற நிலை அதிகரித்து காணப்படுகின்றது.


எனவே விரைவில் பிரதிப் பொலிஸ்மா அதிபரை நியமித்து குற்றச் செயல்களை குறைக்க ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

# கொக்கிளாய் ஆற்றில் சட்டவிரோத மீன்பிடி

## படகுகளும் இயந்திரங்களும் பறிமுதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கொக்கிளாய் ஆற்றில் சட்டவிரோதமாக மீன்பிடி தொழிலில் ஈடுபட்ட 8 மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன் 4 படகுகள், 4 இயந்திரங்கள் ஆகியவையும் பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.



கடந்த திங்கட்கிழமை இரவு 9.30 மணியளவில் கொக்கிளாய் ஆற்றில் சட்டவிரோதமாக மீன்பிடி இடம் பெறுவதாக கிடைத்த தகவலை அடுத்து முல்லைத்தீவு பொலிஸாரின் துணையுடன் முல்லை மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினர் இவ்விடத்துக்குச் சென்று மறுநாள் அதி காலை 5மணி வரை அங்கு தரித்து நின்று சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 8 மீனவர்களையும் கைது செய்ததுடன் 4 படகுகள், 4 இயந்திரங்கள் என்பவற்றையும் பறிமுதல் செய்து நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

இந்த 8 மீனவர்களும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள புல்மோட்டை பகுதியை சேர்ந்தவர்களாவர்.


முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளை வழக்கை விசாரித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா 8 நபர்களுக்கும் 56 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்ததுடன் படகுகளையும் இயந்திரங்களையும் அரசுடமையாக்குமாறும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான 200 கூட்டு வலைகளை நீதிமன்றில் வைத்து எரியூட்டு மாறும் உத்தரவிட்டார்.

இவ்வாறான சட்டவிரோத மீன்பிடித் தொழில் நடவடிக்கை தொடருமாயின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜெ.சுதாகரன் தெரிவித்துள்ளார். (ம-267)



ஜனாதிபதியின் நேரடி கண்காணிப்பில் மஹிந்தோதயா திட்டத்தின் கீழ் 80 இலட்சம் ரூபா நிதியில் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மு/பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை படத்தில் காணலாம். (படம்:- மல்லாவி செய்தியாளர்)

# உளநல மாலை பொழுது நிகழ்வு



(கிளிநொச்சி)

உலக உளநல தினத்தை முன்னிட்டு **உளநல மாலைப் பொழுது நிகழ்வு** இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ப.கார்த்திகேயன், கிளிநொச்சி வலயக் கல்வி பணிப்பாளர் க.முருகவேள், கிளிநொச்சி பொதுவைத்தியசாலையின் உளநல வைத்திய நிபுணர் எஸ்.சிவதாஸ், உலகதரிசன நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் கீர்த்த பால்தாசார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் முதியோர் கௌரவிப்பு, சிறப்பு பட்டிமன்றம், பரிசளிப்பு நிகழ்வு ஆகியன இடம் பெறவுள்ளன. (ம-254)




# சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

முதியோர் தின மாதத்தையொட்டி சிவநகர் முதியோர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு இன்று நடைபெற இருந்த அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் முதியோர் நலன் பேணும் முகமாக நடாத்தப்படும் இவ் அதிர்ஷ்ட இலாபச் சீட்டை பெற்று முதியோர் நலனுக்கு உதவுமாறும் சிவநகர் முதியோர் சங்கத் தலைவர் அ.இரகுபதி அறிவித்துள்ளார். (ம-254)

# புனரமைக்கப்படாத வீதியால் பயணிப்போர் சிரமம்

(முல்லைத்தீவு)

முல்லை நூலகவீதி புனரமைப்பு செய்யப்படாது குண்டும் குழியுமாக காணப்படுவதால் அவ்வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.



முல்லை மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள வண்ணாங்குளம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள பொதுநூலக வீதியே புனரமைப்பு செய்யப்படாது குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

இவ்வீதியூடாகவே முல்லைத்தீவு முஸ்லிம் வித்தியாலயத்திற்கு மாணவர்களும் ஆசிரியர்களும் செல்ல வேண்டி உள்ளனர்.

புனரமைக்கப்படாத வீதியால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாயநிலையும் உள்ளது.

எனவே மழை காலத்திற்கு முன்னர் இவ்வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# லிபியாவின் கடாபி, ஈரானின் மஹ்மூட் வரிசையில்... இலங்கையின்...



ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ச, ஐ.நா பொதுச் சபையில் நிகழ்த்திய உரை குறித்து, அமெரிக்காவின் பிரபலமான லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ் நாளிதழில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது. அக்கட்டுரையில், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அடுத்தமுறையும் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்க வருவாரேயானால், அதிகளவில் அசௌகரியமான வரவேற்பைப் பெறக் கூடும் என்று குறிப்பிட்டிருந்தார், அதை எழுதிய சசாங் பெங்காலி.

ஐ.நா.பொதுச்சபைக் கூட்டங்களில், முன்னெரெல்லாம், லிபிய அதிபர் கடாபி, ஈரானிய அதிபர் மஹ்மூட் அகமடிநிஜாட் போன்றவர்கள், ஐ.நா.வையும் , மேற்குலகையும் அதிகம் விமர்சிப்பவர்களாக இருந்து வந்துள்ளனர். இப்போது, அவர்கள் யாரும் பதவியில் இல்லை. கடாபி மரணமாகிவிட்டார். ஈரானிய அதிபராக இருந்த அஹமடி நிஜாட் பதவியை விட்டு விலகிவிட்டார். இந்த நிலையில், பொதுச்சபையின் 68-வது கூட்டத்தொடரில், ஐ.நா.வைப் பற்றியும், மேற்குலகைப் பற்றியும் சூசகமான முறையில் விமர்சித்து சர்ச்சையைக் கிளப்பியிருந்தார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.





மனித உரிமை ஜனநாயகம் போன்ற ஆயுதங்களை வைத்து, சிறிய நாடுகளை, வல்லமை மிக்க நாடுகள் துன்புறுத்துவதாக அவர், குறிப்பிட்டிருந்தார். அவரது இந்தக் கருத்து, இலங்கை மீதான அமெரிக்காவினதும் மேற்குலகினதும் அழுத்தங்களின் வெளிப்பாடுதான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. சிறிய நாடான இலங்கை மீது, மனித உரிமை உள்ளிட்ட விவகாரங்களைப் பயன்படுத்தி, அனைத்துலக சமூகம் அதிகளவு அழுத்தங்களைக் கொடுக்கிறது என்பது இலங்கை அரசாங்கத்தினது கருத்தாக உள்ளது. ஆனால், சர்வதேச சமூகத்தினது பார்வையில், குறிப்பாக மேற்குலகின் பார்வையில், இலங்கை மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காத நாடாக- எதேச்சாதிகார நாடாகப் பார்க்கப் படுகிறது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவ்நீதம்பிள்ளை வெளியிட்ட கருத்தை இந்த நாடுகள் பெரும்பாலும் ஏற்கின்ற நிலையில் இருக்கின்றன.

எதேச்சாதிகாரப்போக்கில் செல்வதாக, சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரிக்கும் இலங்கை அரசாங்கம், தாம் பதவிக்கு வந்தபின்னர், எத்தனை தேர்தல்களை நடத்தியிருக்கிறோம் என்று கணக்குக் காட்டியிருக்கிறது. ஆனால், தேர்தல் மூலமான தெரிவு என்பது, முற்றிலும் ஜனநாயக சூழலைப் பிரதிபலிப்பதாக அர்த்தமில்லை, என்பதே மேற்குலகின் வாதம்.

ஏனென்றால், பல தசாப்பதங்களாக. ஆட்சியைத் தம் கைக்குள் வைத்திருந்த பல சர்வாதிகாரிகள், தேர்தலைத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொண்டவர்கள் தான்.

மூன்று தசாப்பதங்களுக்கு மேலாக, ஆட்சியில் இருக்கும் சிம்பாப்வே அதிபர் றோபர்ட் முகாபே, அண்மையில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் 7வது தடவையாக வெற்றிபெற்றிருந்தார். ஆனால், அங்கு மோசமான மனித உரிமை மீறல்கள் நடப்பதும், அவரது ஆட்சி சர்வாதிகாரப் போக்குக் கொண்டது என்பதும் வெளிப்படையான உண்மைகள். ஆனாலும், அவர் தேர்தலில் வெற்றிபெற்றுள்ளார். அவரை எதிர்த்துப் போட்டியிட்டவர்களால் வெற்றிபெற முடியவில்லை. இப்படிப்பட்ட சூழலுக்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம்.

ஆட்சியிலிருப்பவர் எல்லாவற்றையும் தன் கைக்குள் போட்டுக் கொண்டு, பிறர் வெற்றிபெற முடியாதளவுக்கு தேர்தலில் செல்வாக்குச் செலுத்துபவராக இருக்க வேண்டும்.

அல்லது வலுவான எதிர்க்கட்சியோ வேட்பாளரோ இல்லாதிருக்கவேண்டும்.

இலங்கையைப் பொறுத்த வரையில், இவற்றில் எந்தச் சூழல் உள்ளது என்பதை புரிந்துகொள்வது ஒன்றும் சிரமமான காரியமல்ல. இலங்கையில், அரசாங்கத்தை எதிர்த்து, தேர்தலில் வெற்றி கொள்வது, எத்தகைய சிரமமான காரியம் என்பதை உலகம் ஓரளவுக்கேனும் புரிந்து கொண்டுள்ளது அதையெல்லாம் தாண்டி வெற்றிபெற வேண்டும் என்றால், அண்மையில் வடக்கு மாகாணசபைத் தேர்தலில், வாக்களித்தது போன்று,பெருமளவு மக்கள், துணிச்சலுடனும் எழுச்சியுடனும் வாக்களிக்கத் தயாராக இருக்க வேண்டும். போர் வெற்றிமாயை என்ற தெற்கிலுள்ள மக்களின் பலவீனத்தை அரசாங்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, தனது அதிகாரத்தை பலப்படுத்திக்கொள்வதை உலகம் அவ்வளவாக சகித்துக்கொள்ளத் தயாராக இல்லை. அதனால்தான், நவநீதம் பிள்ளையின் வாயில் இருந்து எதேச்சாதிகாரப் போக்கு பற்றிய கருத்து வெளியானது. அதுமட்டுமன்றி, அடுத்த ஆண்டு மார்ச் மாதம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பான முழுமையான அறிக்கையை அவர் சமர்ப்பிக்கப் போகிறார். அவரது வாய்மூல அறிக்கையில் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மீறல்கள் குறித்து விசாரிப்பது தொடர்பாக இலங்கை அரசாங்கம் முன்னேற்றகரமான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தார். அதுமட்டுமன்றி, வரும் 2014ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள், பொறுப்புக் கூறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால், தனியான விசாரணைப் பொறிமுறையை உருவாக்கும், கடப்பாடு சர்வதேச சமூகத்துக்கு உள்ளது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

சர்வசே விசாரணைப் பொறிமுறையை உருவாக்கும் அதிகாரத்தை நவநீதம்பிள்ளை கொண்டிருக்காது போனாலும், சர்வதேச சமூகத்தின் துணையுடன் அதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் நிலையில் அவர் இருக்கிறார். அவரது நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்வதாக அமெரிக்கா ஒன்றுக்கு இரண்டு முறை அதிகாரபூர்வமாகவும் அறிவித்துள்ளது.

ஆக, வரும் மார்ச் மாதத்துக்குள், பொறுப்புக் கூறுவதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்க அரசாங்கம் தவறினால், அடுத்த கட்ட நடவடிக்கைகளில் சர்வதேச சமூகம் இறங்குவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. ஆனால், சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை ஏற்றுக்கொள்ளும் நிலையில், இலங்கை அரசாங்கம் இல்லாது போனாலும், சர்வதேசப் பொறிமுறையைத் தவிர்ப்பதற்கான எந்த முயற்சிகளிலும் ஈடுபட அது தயாரக இல்லை.

இத்தகையதொரு சூழலில் லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ் கட்டுரை, கடாபி, அஹமடி நிஜாட் பேர்ன்றவர்களையும் நினைவுபடுத்தி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பற்றிய கட்டுரையை வரைந்துள்ளது. அதுமட்டுமன்றி, டார்பூர் பிராந்தியத்தில் இனப்படு கொலை, மற்றும் பிற குற்றங்களில் ஈடுபட்டதற்காக அனைத் துலக நீதிமன்றத்தினால், பிடியாணை பிறப்பிக்கபட்ட சூடானிய அதிபர் ஒமர் ஹசன் அகமட் பசீரையும், தொடர்புபடுத்தி இந்தக் கட்டுரை வரையப்பட்டுள்ளது.

சூடானிய அதிபர் இம்முறை ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்திற்கு செல்ல முடியவில்லை. காரணம் அவர் மீதான போர்க்குற்ற விசாரணைதான்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறத் தவறினால், சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்புத்தான், அடுத்த முறை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஐ.நா. பொதுச்கபைக் கூட்டத்திற்கு வருவாரேயானால், அசௌகரியமான வரவேற்பை சந்திக்க நேரலாம் என்று லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ் கட்டுரை குறிப்பிட்டதற்கரன காரணம்.

இது, இலங்கை அரசாங்கம் சர்வதேச அளவில் பாரிய நெருக்கடிகளைச் சந்திப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன என்ற கருத்தையே பிரதிபலிக்கிறது.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கும் அரசு அடுத்த வருடத்தில் இரண்டு தேர்தல்களை நடத்தும்

## மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

**பாரிய அரசியல், பொருளாதார, சர்வதேச நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் இந்த அரசாங்கம் அடுத்த வருட ஆரம்பத்தில் மேல் மாகாண சபை தேர்தலையும் நடுப் பகுதியில் ஜனாதிபதி தேர்தலையும் அதையடுத்து பாராளு மன்ற தேர்தலையும் நடத்த முடிபு செய்துள்ளது.**



எனவே, வருட ஆரம்பத்தில் மேல் மாகாண சபை தேர்தலுக்கும் வருட நடுப்பகுதியில் பாராளுமன்ற தேர்தலுக்கும் நாம் தயாராக வேண்டும். எனவே, அடுத்த வருடம் நமக்கு தேர்தல் வருடமாகும்.

வடக்கிலும் மலையகத்திலும் நமது தமிழ் இனம் பெற்றுள்ள வெற்றிகளுக்கு சமமான வெற்றிகளை மேல்மாகாண சபை தேர்தலில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் நாம் பெற வேண்டும்.

நமது கட்சியின் தனித்துவ பலத்தை உறுதிப்படுத்தி உருவாகப் போகும் புதிய ஆட்சியில் ஒரு பலமிக்க பங்காளி கட்சியாக நாம் இடம்பெற வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் மேல்மாகாண சபை உறுப்பினருமான எஸ். ராஜேந்திரன் தலைமையில் கொழும்பு பிரைட்டன் விருந்தக மண்டபத்தில் தலைநகர மக்கள் ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றி போதே அவர் இதனை கூறினார்.

மேல் மாகாணம் எங்கள் கோட்டை. இதை நாங்கள் கடந்த காலங்களை விட மிகவும் அதிகமாக உறுதிப்படுத்தி காட்டிட வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது.

யுத்தத்தை முடித்து யுத்த வெற்றியை மாத்திரம் மூலதனமாக கொண்டு நடத்தப்படும் இந்த ஆட்சி அடுத்த வருடம் முடிபுக்கு வரும்.

இந்நாட்டு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் அதிருப்தியை சம்பாதித்துள்ள இந்த அரசுக்கு எதிராக ஒரு பலமிக்க எதிரணி ஜனநாயக கூட்டணி உருவாகும் வேளை வந்து கொண்டிருக்கின்றது. அதற்கான பல்வேறு திரைமறைவு அரசியல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு கொண்டுள்ளன.

கொழும்பில் தமிழ் வாக்கு வங்கி இன்று ஐ.தே.கவிடம் கிடையாது. அது எங்களிடம் இருக்கின்றது. அது மட்டுமல்ல. கடந்த மாநகர சபை தேர்தலுக்கு பின்னர் அது இன்று இன்னமும் வளர்ந்துள்ளது.

இந்த உண்மை, அடுத்த தேர்தலின் போது கொழும்பு மாவட்டத்தில் மட்டுமல்ல வத்தளை, நீர்கொழும்பு பிரதேசங்களை உள்ளடக்கிய கம்பஹா மாவட்டத்திலும் களுத்துறை மாவட்டத்திலும் வெளிப்படும் என்றார். (அ)

# நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு யாழ்.மாநகரசபையினால் முன்னெடுக்கப்படும் நுளம்புக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் இன்று வியாழக்கிழமை முற்பகல் 8மணிமுதல் நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெறவுள்ளன.

இதன்போது மாநகர சபை சுத்திகரிப்பு பிரிவினரால் விசேட கழிவகற்றல் மற்றும் மருந்து விசிறல் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (அ-5)

# வாணி விழா

(யாழ்ப்பாணம்)

பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலைய வாணி விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நிலைய சமயப் பொறுப்பாளர் திருமதி மலர் விழி ஸ்ரீகந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாடல், பேச்சு, கவிதை மற்றும் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ள அதேவேளை சிறப்புரையை திருமதி தர்சினி சுதேஸ்வரன் வழங்கவுள்ளார். (அ-5)

# தேசிய மட்டத்திலான கணித விநாடிவினா போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

2013 ஆம் ஆண்டுக்குரிய தேசிய மட்ட கணித விநாடிவினாப் போட்டி செப்டெம்பர் மாதம் 12, 13 ஆம் திகதிகளில் தேசியக் கல்வி நிறுவகத்தில் மொழிவேறுபாடுகள் இன்றி ஒன்பது மாகாணங்களுக்கிடையேயும் நடைபெற்றது.

இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த கனிஷ்ட பிரிவு அணி முதல் இடத்தையும் சிரேஷ்ட பிரிவு அணி மூன்றாம் இடத்தையும் தமதாக்கிக் கொண்டது என வடக்கு மாகாண கல்வி பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**கனிஷ்டபிரிவு**

என். சிவமைந்தன் (யா/இந்துக் கல்லூரி), எஸ். ஆரணி (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), வி.சர்மிகா (வ/ இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), பி.அர்ஜுன் (வ/தமிழ் ம.ம.வி.), எஸ். யதுர்சன் (யா/ ஹாட்லிக் கல்லூரி), ஆர்.யதுர்சன் (யா/இந்துக் கல்லூரி),

**சிரேஷ்ட பிரிவு**

எல். சிறீஹர்சன் (யா/இந்துக் கல்லூரி), எஸ்.சுபாசன்ன (யா/நாவற்குழி ம.வி.), ரி.மதுமிலன் (யா/ இந்துக் கல்லூரி), ரி.தக்சயன் (யா/ இந்துக் கல்லூரி), ரி. அபிஷேகா (யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), ஜே.சத்தியதரண்யா (கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்) (அ)

# சம்பூர் அனல்மின் நிலைய ஒப்பந்தம் குர்ஷித் முன்னிலையில் கைச்சாத்து

திட்டமிடப்பட்டுள்ள சம்பூர் அனல்மின் நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்கான ஐந்து ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்திய தேசிய அனல்மின்சார கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையே இந்த உடன்படிக்கைகள் கையெழுத்தாகியுள்ளன.

உடன்படிக்கையின்படி அனல்மின் நிலையத்தின் ஊடாக மேலதிகமாக 500 மெகாவோட் மின் உற்பத்தியை மேற்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது, மின்சக்தித்துறை அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தும் பங்கேற்றிருந்தனர்.

இதன்பின்னர் இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜீ.எல். பீரிசும் இணைந்து செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தினார்கள். அரசியல் அமைப்பிற்கு அமையவும் பொதுமக்களின் விருப்பத்திற்கு அமையவும் அதிகார பரவலாக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும் என குர்ஷித் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பேச்சுவார்த்தைகள் மூலம் ஜனநாயக முறையிலான தீர்வினைக்காண வேண்டும். இதன்மூலம் இருதரப்புக் கருத்துக்கள் பரிமாறுவதன் ஊடாக சிறந்த தீர்வைப் பெறலாம் என்று நான் எதிர்பார்க்கின்றேன். தற்போது வடமாகாணத்தில் ஜனநாயக ரீதியிலான அரசியல் அமைப்பொன்று உருவாகியுள்ளது.

அவர்கள் மத்திய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு தமது குறைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க முடியும் என்பதுடன் சகல தரப்பினரின் அபிலாஷைகள் அரசியல் யாப்பிற்கு அமைய பேணப்படும் என விரும்புகிறேன் என்று தெரிவித்தார். (எ-11)


# மின்னியலாளர் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் மின்னியலாளர் பயிற்சி நெறிக்கு (NVQ சான்றிதழ்) யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிக்கான கல்வித் தகைமையாக க.பொ.த. (சா/த) வரை கல்வி கற்றிருப்பதுடன் விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இல., பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர் NAITA, இல. 44, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் மின்னியலாளர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்பட வேண்டும் எனவும் அதன் மாவட்ட அலுவலகர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். (அ)



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வுகளின் போது.... (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய சேமிப்பு வங்கியின் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கியின் வடபகுதி கிளைகளில் சிறுவர் சேமிப்புக் கணக்கை நடைமுறைப்படுத்தி வரும், நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற, வங்கியால் விதந்துரைக்கப்படும் தகுதியை உடைய மாணவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது கணக்கை நடைமுறைப்படுத்தியுள்ள கிளையில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த மாணவர் பரீட்சை நடைபெற்ற தினத்திலோ அல்லது அதற்கு முன்போ தமது கணக்கை ஆரம்பித்திருப்பதோடு, கடந்த முதலாம் திகதியில் கணக்கு மீதியாக 2 ஆயிரத்து 500 ரூபாவை கொண்டிருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது. (அ-5)

# ஆஸி பயணிப்போரை தடுக்க இலங்கையில் தீவிர பிரசாரம்

(கொழும்பு)

சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் படகு மூலம் நாட்டுக்குள் பிரவேசிப்பதை தடுக்கும் நோக்கில் அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கையில் தீவிர பிரசாரங்களை ஆரம்பித்துள்ளது.

புகலிடக் கோரிக்கையாளர்கள் எதிர் நோக்கக் கூடிய ஆபத்துக்களை விபரிக்கும் வகையிலான துண்டுப் பிரசுரங்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் வீதிகளில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இந்தப்பிரசார நடவடிக்கைகளுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் நிதி உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


உள்நாட்டு பிரசார நிறுவனங்களைப் பயன்படுத்தி இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் இந்தப் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளது.

அண்மையில் சிங்கள, தமிழ் மொழிகளில் புகலிடக் கோரிக்கையாளர்கள் எதிர்நோக்கி வரும் ஆபத்துக்கள் குறித்து விபரிக்கும் துண்டுப் பிரசுரங்கள் நீர்கொழும்பில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக கரையோரப் பகுதிகளை இலக்குவைத்தே இந்தப் பிரசாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் புகலிட கோரிக்கையாளர்களின் படகுப் பயணங்களுக்கு எதிரான பிரசாரங்களை அவுஸ்திரேலியா தீவிரப்படுத்தியுள்ளது.

இதேவேளை புகலிடக் கோரிக்கையாளர்களின் படகுப் பயணங்களைத் தடுத்து நிறுத்தும் அவுஸ்திரேலியாவின் முயற்சிக்கு இலங்கை பூரண ஒத்துழைப்பு வழங்கும் என அந்நாட்டுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் திசர சமரசிங்க தெரிவித்துள்ளார்.

யுத்த நிறைவைத் தொடர்ந்து திட்டமிட்ட அடிப்படையிலான பாரிய சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)




இலங்கை வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட மெகா வாசி 2013 ஆம் ஆண்டிற்கான முதலாவது சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை தலைவர் கே.தேவராஜா வெற்றியீட்டிய வாடிக்கையாளர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# பொதுநலவாய மாநாட்டுக்கான நிதி ஒதுக்கீடுகள் நிறுத்தப்படும் கனடா எச்சரிக்கை

பொதுநலவாய நாடுகள் அமைப்பிற்கான நிதி ஒதுக்கீடுகளை நிறுத்தப் போவதாக கனடா அச்சுறுத்தல் விடுதுள்ளது.

இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாடு நடத்தப்படுவதனை கனடா எதிர்த்து வரும் நிலையில், நிதி உதவிகளையும் நிறுத்திக் கொள்ளப் போவதாக அறிவித்துள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து திருப்தி அடைய முடியாது என கனேடிய பிரதமர் ஸ்டீவன் ஹார்பர் தெரிவித்துள்ளார்.

எனவே, கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டை புறக்கணிக்கப் போவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார். தற்போது பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்விற்காக வழங்கப்பட்டு வரும் உதவி தொகைகளையும் இரத்து செய்யப் போவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இம்மாநாடுகள் அமைப்பிற்கான நிதி வழங்கும் பிரதான நாடுகளில் கனடா முக்கிய இடம் வகிக்கின்றது. வருடாந்தம் கனடா 20 மில்லியன் அமெரிக்க பொலர்களை நிதி உதவியாக வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கனடா மாநாட்டை புறக்கணிக்கும் என எதிர்பார்த்ததாகவும் இந்தத் தீர்மானம் ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை எனவும் அந் நாட்டுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சித்ரா வாகீஸ்வரா தெரிவித்துள்ளார்.

ஏனைய அனைத்து நாடுகளினதும் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)

# அரசு கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட வேண்டும்-ஐ.தே.க

அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து இணக்கத்துடன் கூடிய அரசியல் முனைப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொது செயலாளர் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இந்த கோரிக்கையை விடுத்தார்.

தேர்தலின் போது மஹிந்த அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக பலவித கெடுபிடிகளை மேற்கொண்ட போதும் இறுதியில் அவர்களை வரவேற்று பொறுப்புக்களை கையளிக்கும் நிலையேற்பட்டுள்ளது.

அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வகையில் செயற்படுவதாக உறுதிமொழி எடுத்தமையானது நல்லிணக்கத்துக்கு ஒரு படியாகவுள்ளது.

எனவே, அரசாங்கம் இந்த நல்லிணக்கத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்று இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (அ-2)

# பிரதியமைச்சர் தெரிவு குறித்து இறுதி முடிபு எடுக்கப்படவில்லை

**ஜனாதிபதி செயலர் தெரிவிப்பு**

பிரதியமைச்சர் தெரிவு தொடர்பில் இறுதித் தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

மிக விரைவில் சில பிரதியமைச்சர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாகாண சபைகளில் அமைச்சுப் பதவிகளை வகித்தவர்களுக்கும் மாவட்ட ரீதியில் கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனினும் பிரதியமைச்சு பதவி வழங்குவது குறித்து இன்னமும் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

எதிர்வரும் நாட்களில் பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்பட உள்ளதாகவும் எத்தனை பேருக்கு பதவிகள் வழங்கப்படும் என்பதனை நிச்சயமாக கூற முடியாது எனவும் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னதாக பதின்மூன்று பேருக்கு பிரதியமைச்சர் பதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் விபரம்

இவ்வாண்டுக்கான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித் தியடைந்த மாணவர்களின் விபரங் களை பாடசாலைகளின் அதிபர்கள் அறிவித்துள்ளனர். இதன்படி சித்தியடைந்த மாணவ்ர்க ளின் விபரம் வருமாறு,

**மு/அனிஞ்சியன்குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்**

ச.கஜன்- 184, வி.லக்ஷிகன் - 180, ப.அனோஜன் - 178, பி. தனோஜன் -177, யோ.லாவனியா-174, த.லுக்சிகா- 171, கெ.சஞ்சயன்-171, ச. துஷாந்தி- 170, தி.நிவேகா- 168, சு.லிந்துஜா- 168, ம.யதுர்ஷா- 167, சி.தமிழ்வேந்தன்-164, ஞா. சுகிர்தன்- 158, லி.கதீசன்-153, சி.பவிதா-159

**மு/சண்முகரட்ணம் வித்தியாலயம்**

எஸ்.கவிதாரணி-161, வி.கஜானா- 158, சு.நிவேதா- 153

**மு/ தண்டுவன் அ.த.க.பாடசாலை**

ஜெ.ஜென்சிகா- 168

**மு/முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை**

சா.கிசாளினி- 153

**மு/கொல்லவிளாங்குளம் அ.த.க.பாடசாலை**

கு.தர்மிகா-'155

**மு/பாலிநகர் குமாரசாமி ஆரம்ப வித்தியாலயம்**

பி.பிவரிதன்- 153, ம.டிலக்ஷனா-159, ச.சங்கவி- 157, நா.வினித்தா-153

**மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயம்**

மு.கவிசாந்-161, மு.சாரங்கன்- 155,

**மு/பெரிய புளியங்குளம் அ.த.க.பாடசாலை**

த.லோஜனா -155

**மு/பாண்டியன்குளம் ஆரம்ப வித்தியாலயம்**

சி.டயானா-160, ச.சர்மிகா- 154

**மு/ஆறுமுகம் வித்தியாலயம்**

பு.சதீஸ்குமார் -165, ந.பிரபாகினி 164, எஸ்.தனுசன்-157, எஸ்.கர்சிகன்- 156

**யா/வண்.ஸ்ரீவைத்திலிங்கம் வித்தியாலயம்**

ரவிச்சந்திரன் கவிதன்-168

**மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**

கனகேஸ்வரன் கவிசனா-178, அச்சுதன் பிரணவன்- 177, சிவசோதிலிங்கம் துசந்தி-176, நவீஸ்வரன் [illegible]-166, [illegible] தக்சிகா-164, [illegible] கருணி-164, வரதராஜா கஜிந்தன்-164, கணேசலிங்கம் யதுர்ணன்-163, விஜயகுமார் கம்சிகா- 155

**கிளி/உருத்திரபுரம் ம.வி**

யோகநாதன் தசனிகா- 165, தருமரட்ணம் திவ்வியா- 164

**கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம்**

ஜெகநாதன் அனோஜன்- 184, தியாகலிங்கம் சஞ்சீவனா- 182, யூட்மணிவண்ணன் நகுலதர்சன்-179 சண்முகம் மாதுளன்- 177, செந்தில்வேலவர் அபிஷாயினி-173, விஜயகுமார் சபரிகா-170, திவ்வியதீசன் தர்சிஜன்-168, பாலச்சந்திரன் சானுஜன்- 163, யூனியன்ஜினோசியா-162, தளையசிங்கம்லோஜினி-158, திருப்புகழ்குமரன் பவிஸ்ரா- 157, மகேந்திரன் எனுசுஜன்-156

**யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை**

நிவேதனா முருகானந்தன்-187, தயாளன் மிதுளன்-183, கிரிஷாஜினி இராசகுமார்-179, லெஸ்லி பாஸ்கரதேவன் அபிஷேக்-179, அட்சயா சற்குணசீலன்-178, பானுசா அகேந்திரன்-175, சிறிரஞ்சன் அபி[illegible]-175, [illegible] மாதவன்-175, பிரணவி [illegible]மனோகரன்-174, ரமணிதரன் மனுகீதசர்மா-173, மாதமி சுந்தரகுமார்-172, சிறிதரன் மாதவன்-172, நிகிதா புஸ்பவரதன்-171, தியாகராஜா திலக்சன்-170, சதுர்சிமா ரவீந்திரன்-169, தேனுசா குலெந்திரன்-169, ஆரபி கந்தவனச்செல்வன்-169, பிரின்சி கிருபிகா செல்வ்குமார்-167, கோபாலச்சந்திரன் அபினாஸ்-167, ரவிச்சந்திரன் திலக்சன்-166, சண்முகராசா சுலக்சன்-166, உமாசுதசர்மா கபிலசர்மா-165, குகானந்தபவன் ராகுலன்-164, ஜெகதீஸ்வரன் அஜய்-164, ரூபகுமார் டிபர்சன்-163, நிக்சன் கொலின்ராஜ்-163, கிருஷிக்கா குகனேசன்-163, தேவேந்திரராசா கிருத்தியன்-162, சுந்தரலிங்கம் சாரங்கன்- 161, விஜயபாலன் கிருஜ்ணபாலன்-161, கம்சானந்தி ஆனந்தராசா-161, பவிதாகினி கிருபாகரன்-160, சரவணபவன் கணேசவேல்-160, கேதீஸ்வரன் யேகீசன்-159, முருகவேள் ஆதீசன்-158, பவித்ரா மோகனராஜ்குமார்-158, சிவாணந்தன் விதுன்-156, சோதிராசா அபிராம்-156, சதுர்சிகா சிவயோகராசா-156, ரஜனிக்காந்த் ராஜபுத்திரன்-155, யஸ்மிதா லயாகலன்-155, சாம்பவி பிரேமகுமார்-154, சபீனா நகுலேஸ்வரன்-154, சரண்யா விஜயவர்மன்-154, சங்கீதா சூரியதேவன்-154.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் மூண்டால் அமெரிக்கா பொறுப்பு

## வடகொரியா எச்சரிக்கை

**தென்கொரியா மற்றும் ஜப்பான் நாடுகளுடன் இணைந்து அமெரிக்கா நடத்தவிருக்கும் கடற்போர் ஒத்திகை காரணமாக போர் மூண்டால் அதற்கு அமெரிக்காவே பொறுப்பேற்க வேண்டும் என வட கொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.**




தேவைஏற்படின் அமெரிக்கா மற்றும் தென் கொரியா மீது அணு ஆயுதத் தாக்குதல் தொடுப்போம் என்று சமீபத்தில் வட கொரியா மிரட்டல் விடுத்திருந்தது.

மேலும், தனது பழைய புளூட் டோனியம் அணு உலை ஒன்றை யும் அந்நாடு மீண் டும் செயற்படுத்த ஆரம்பித்துள்ளது.

இதற்கு பதிலடி கொடுப்பதற்காக கடந்த வாரம் அமெரிக்காவும், தென் கொரியாவும் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டன.

அதன்படி, கொரிய தீபகற்பத் துக்கு அருகல் தென் கொரியா, ஜப்பான் நாட்டு போர்க் கப்பல்களு டன் இணைந்து அமெரிக்காவின் அணுசக்தி விமானந்தாங்கி கப்பல் போர் ஒத்திகையில் ஈடுபட முடிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து, வட கொரியா நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில், ""இந்த நடவடிக் கைகள் கொரிய தீபகற்பத்தில் மீண்டும் பதற்ற நிலையை ஏற்படுத் தியுள் ளன. எதிர்பாராத விதமாக ஏற்படும் எந்த வொரு பேரழிவுக்கும் அமெரிக்காதான் பொறுப்பேற்க வேண்டும்.

எங்கள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட முயன்றால், அத ற்கு தக்க பதிலடி கொடுக்க வட கொரிய மக்களும், இராணுவத்தி னரும் எப்போதும் தயார் நிலையில் இருக்கிறார்கள் என்பதை அமெரிக்கா புரிந்து கொள்ள வேண்டும்" என்று அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாக தென் கொரிய இரா ணுவ செய்தித் தொடர்பாளர் தெரி வித்துள்ளார்.

எனினும், "மீட்புப் பணிகளுக் காக ஆண்டுதோறும் வழக்கமாக நடைபெறும் சாதாரண ஒத்திகை தான் இது"" என்று அமெரிக்க - தென் கொரிய கூட்டுப் படையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள் ளார். நேற்று முன்தினம் ஆரம்ப மாகவிருந்த இந்த ஒத்திகை, பருவகால நிலை காரணமாக தள்ளி வைக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2)

# சிரியாவில் இர.ஆயுதங்கள் அழிக்கும் பணி பேராபத்துக்கள் நிறைந்தவை

## பான் கீ மூன் கவலை



இரசாயன ஆயுத சோதனை மற் றும் அதனை அழிக்கும் பணி யில் நிபுணர்கள் ஈடுபட்டு வருகி ன்றனர். இவர்களது எண்ணிக் கையை 100 பேராக அதிகரிக்க பான்கீமூன்பரிந்துரை செய்துள்ளார்.

சிரியாவில் இரசாயன ஆயுத ங்களை அழிக்கும் பணி ஆரம பிக்கப்பட்டுள்ளது. இதில் ஓரா ண்டு கால மாக ஈடுபடவுள்ள நிபுணர்கள் எதிர்பாராத விதமாக பல பேராபத் துக்களைச் சந்திக்க வுள்ளனர் என ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன் கவலை தெரிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் சிரியா தலைநகர் டமாஸ்கஸ் அருகே இராணுவம் நிகழ்த்திய இரசா யன ஆயுத தாக்குதலில் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந் தனர். இச்சம்பவம் உலகம் முழு வதும் பெரும் சர்ச்சையை ஏற்படு த்தியது.

இந்நிலையில் சிரியா அரசிட முள்ள இரசாயன ஆயுதங்களை அழிக்க கடந்த மாதம் 27 ஆம் திகதி ஐ.நா. பாதுகாப்பு சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தப் பணியில் ஐ.நாவும் இரசா யன ஆயுத தடுப்பு நிறுவனமும் கூட்டாக ஈடுபடுவது என தீர்மா னிக்கப்பட்டது.

இதனைய்டுத்து சிரியாவில் இரசாயன ஆயுத சோதனை மற் றும் அதனை அழிக்கும் பணி யில் நிபுணர்கள் ஈடுபட்டு வருகி ன்றனர். இவர்களது எண்ணிக் கையை 100 பேராக அதிகரிக்க பான்கீமூன்பரிந்துரை செய்துள்ளார்.

எனவே சிரியாவிலுள்ள இரசா யன ஆயுதங்களை அழிக்க ஓரா ண்டு காலம் ஆகலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. அதாவது அடு த்த ஆண்டு ஜூன் மாத இறுதி வரை இந்தப் பணி நீடிக்கும் என்று கணக் கிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களி டம் பேசிய பான் கீ மூன், இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள நிபுணர் களு க்கு எதிர்பாராத பேராபத்துக் கள் அதிக அளவில் இருப்பதாகத் தெரிவித்தார். (2)

# அமெ.வின் கடன் சுமையை பயன்படுத்தி குடியரசு கட்சியினர் மிரட்டுகின்றனர்

## ஒபாமா குற்றச்சாட்டு



நாட்டில் ஏற்பட்டுள்ள கடன் உச்சவரம்பை குடியரசு கட்சியினர் மிரட்டலுக்கு பயன்படுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா குற்றஞ்சாட்டியுள்ளார்.

குடியரசுக் கட்சியினருடன் வரவு-செலவுத் திட்டப் பேச்சுவார்த் தையை ...த்துவதற்கு தாம் விரும் புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

எனினும் பொருளாதாரத்திற்கு எதிரான அச்சுறுத்தல்களை குடியர சுக் கட்சியினர் கைவிடுவதற்கு இணங்காத வரை இந்த பேச்சு வார்த்தை சாத்தியம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரவு-செலவுத் திட்டத்திற்கு காங்கிரஸ் அங்கீகாரம் வழங்காத நிலையில், அமெரிக்காவில் கடந்த ஒருவாரகாலமாக ஸ்தம்பித நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட் டான நிலையை முடிவுக்கு கொணடு வருவது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கான அழைப்பினை பராக் ஒபாமாவிற்கு குடியரசுக் கட்சி யினர் விடுத்துள்ளனர்.

பேச்சுவார்த்தை நடத்துவதை ஒபாமா நிராகரித்து வருகின்றமை குறித்து குடியரசுக் கட்சியைச் சேர் ந்த பிரதிநிதிகள் சபையின் சபாநா யகர் ஜோன் பேனர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

சரணடையாத வரை பேச்சு வார்த்தைகளுக்கு தயார் இல்லை என்ற அமெரிக்க ஜனாதிபதியின் நிலைப்பாடு பொருத்தமற்ற ஒன் றெனவும் அவர் சுட்டிக் காட்டியுள் ளார்.

இதேவேளை அமெரிக்க வாழ் இந்தியரான பாபி ஜிண்டால் லூசி யானா ஆளுநராக இருந்து வரு கிறார். இவர் அடுத்த அமெரிக்க ஜனாதிபதிக்கான தேர்தலில் குடிய ரசு கட்சியின் ஆதரவு பெற்ற வேட் பாளராக நிற்கவிருப்பதாக பேசப்ப ட்டு வருகிறார். இந்நிலையில் தற் போதைய பொருளாதாரப்பிரச்சி னைக்கு தீர்வு காண முயலாது என் வழி தனி வழி என ஒபாமா இருக் கிறார் என்று ஜிண்டால் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது,

நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண் டிய வழியில் அமெரிக்க ஜனாதிபதி செல்லவில்லை. என் வழி. தனி வழி. நான் பேச்சுவார்த்தைக்கு உடன்படப் போவதுமில்லை. நான் எதையும் மாற்றப்போவதுமில்லை என்று அவர் சபையில் கூறி வருகி றார். அது ஒரு தலைவருக்கான கண்ணியம் அல்ல.

அவருடைய திட்டம் எங்கே இருக்கிறது. மக்களுக்கு பயன்ப டுகிற மாதிரி ஒரு வரவு செலவு திட்டத்தை ஒபாமா கொடுத்து இருக்க வில்லை. இந்த வருடமோ, அடுத்த வருடமோ, அல்லது இன்னும் அடுத்த பத்து ஆண்டுகளுக்கோ அவர் ஒரு மக்க ளுக்கான வரவு செலவுத்திட்டத்தை கொடுக்க போவ தில்லை. அவர் ஒருபோதும் அப்படி செய்யவும் மாட் டார்.

அரசு எந்த நடவடிக்கைகளை யும் எடுக்காத நிலையில், அலுவ லங்கள் மூடியிருப்பதையோ அல் லது இப்படியொரு நிலையையோ ஒபாமா விரும்பியிருக்கவில்லை என அவர் கூறினார். (2)



மூன்று நாட்கள் அரசுமுறை பயணமாக துருக்கி சென்ற இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, தலைநகர் அங்காராவில் அந்நாட்டு ஜனாதிபதி அப்துல்லா குல்லை சந்தித்ததைப் படத்தில் காணலாம்.


# அரசாங்க அறிவித்தல்

**யாழ் மாவட்ட செயலக சுத்திகரிப்பு சேவைக்கான கேள்வி அறிவித்தல் -2014**

யாழ் மாவட்ட செயலக வளவில் உள்ள சகல மலசல கூடங்களையும், சுற்றுப்புறங்களையும் மற்றும் கழிவுநீர் வழிந்தோடும் வாய்க்கால்களையும் துப்புரவு செய்வதற்கான கேள்விகள் பொருத்தமான சேவை வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. இது தொடர்பான மேலதிக தகவல் களையும், விண்ணப்பப்படிவத்தினையும் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் 2013.10.14 ஆந் திகதியிலிருந்து அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 2.30 மணி வரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500.00 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000.00 உம் செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம். செயலகத் தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக்கொண்ட விபரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங் களை ரூபா 5000.00 செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியுடன், "தவிசாளர், பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரியிட்ட, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "யாழ் மாவட்ட செயலக சுத்திகரிப்பு சேவைக்கான கேள்வி அறிவித்தல் - 2014" என குறிப்பிட்டு 2013.10.30 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம் பி.ப 3.00 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதி நிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

**சுந்தரம் அருமைநாயகம்**
**மாவட்ட செயலர், யாழ் மாவட்டம்.**

(சி-5118)



HATTON NATIONAL BANK HNB

# அடகுப் பொருட்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், யாழ்ப் பாணம் ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், சங்கானை ஆகிய கிளைகளில் 06.08.2012 இற்கு முன்னர் அட்கு வைத்து இதுவ்வரை மீட்கப்படாத காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாள ரின் அடகு நகைகள் 11.10.2013 - 15.10.2013 (வெள்ளி - செவ்வாய்) வரை காலை 9 மணி தொடக் கம் மாலை 7 மணிவரை இல.212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்.கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

(சி-5109) **ஹற்றன் நஷனல் வங்கி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சல்மான் குர்ஷித்தின் இலங்கை பயணம் தமிழர்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது

## பா.ம.க.நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு



(சென்னை)

**இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தின் இலங்கைப் பயணம் ஈழத் தமிழர்களுக்கு அதிகாரம் பெற்றுத் தரும் என்று உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் நம்பிக் கொண்டிருந்த நிலையில், அனைவருக்கும் ஏமாற்றமே மிஞ்சியிருக்கிறது என பா.ம.க.நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் கடுமையான போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, போரை முடிவுக்கு கொண்டு வந்து, ஈழத் தமிழர்களுக்கு அதிகாரம வழங்க வேண்டும் என்று உலக நாடுகள் வலியுறுத்தின.

அதற்கு அப்போது பதிலளித்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையில் போர் முடிவடைந்த 6 மாதங்களில் தமிழர்களுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணப் படும் என்று கூறியிருந்தார்.

போர் முடிவடைந்த பின்னர் இலங்கை சென்ற ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனிடமும் இதே உத்தரவாதத்தை இலங்கை அரசு அளித்தது. ஆனால், அதன் பின்னர் நான்கரை ஆண்டுகள் கடந்த போதிலும் ஈழத் தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்க இலங்கை ஜனாதிபதி முன்வரவில்லை.

இலங்கை வடக்கு மாநிலத்தில் தேர்தல்கள் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், வடமாநிலத்திற்கு நில அதிகாரமோ அல்லது பொலிஸ் அதிகாரமோ வழங்கமுடியாது என்று கூறி தமிழர்களின் நம்பிக்கைச் செடியை கொதிநீர் ஊற்றி அழிததிருக்கிறார் இலங்கை ஜனாதிபதி. இதன்மூலம் 1987 ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கும், அதனடிப்படையில் செய்யப்பட்ட 13 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்திற்கும் அவமரியாதை செய்திருக்கிறார்.

இந் நிலையில் இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், இலங்கை ஜனாதிபதியை எச்சரித்து, 13 ஆவது அரசியல் சட்ட திருத்தத்தை செயற்படுத்த சம்மதிக்க வைப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அவரோ வழக்கம் போலவே இலங்கை ஜனாதிபதியின் விருந்தினராக சென்று விருந்து சாப்பிட்டுவிட்டு திரும்பியுள்ளார். 13 ஆவது அரசியல் சட்ட திருத்தம் இலங்கை நாடாளுமன்றத்தில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுவிட்ட நிலையில், தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க யாருடைய அனுமதியும் தேவையில்லை. ஆனால், தமிழர்களுக்கு அதிகாரம் வழங்குவது குறித்து இலங்கை நாடாளுமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும் என்று அவர் கூறியிருக்கிறார்.

அதை மறுத்து, தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க நாடாளுமன்றத்தின் அனுமதி தேவையில்லை. 13ஆவது சட்ட திருத்தத்தின்படி நேரடியாக அதிகாரம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி, இலங்கையை குர்ஷித் பணிய வைத்திருக்க வேண்டும். ஆனால், அவரோ மஹிந்த ராஜபக்ஷ கூறியதற்கு தலையாட்டி விட்டு வந்திருக்கிறார். இதன் மூலம் ஈழத் தமிழர்களுக்கு மட்டுமன்றி, இந்தியாவின் இறையாண்மைக்கும் குர்ஷித் துரோகம் செய்திருக்கிறார்.

அதுமட்டுமன்றி, தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் விவகாரத்திலும் இலங்கையை அவர் கண்டிக்கவில்லை. மாறாக, தமிழக மீனவர்கள் பேராசையுடன் தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி இலங்கை கடல் வளங்களையும், இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரங்களையும் அழிப்பதாக குற்றஞ்சாட்டியிருக்கிறார்.


இந்திய அமைச்சராக இருந்து, தமிழக மீனவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்க வேண்டிய சல்மான் குர்ஷித், இலங்கை அமைச்சரைப் போன்று கருதிக் கொண்டு தமிழக மீனவர்களை விமர்சித்திருப்பது கண்டிக்கத்தக்கது. மொத்தத்தில் சல்மான் குர்ஷித்தின் இலங்கைப் பயணம் தோல்வியடைந்து விட்டது.

தமிழகத்திற்கு சொந்தமான கச்சதீவை இலங்கைக்கு சொந்தமானது என்றும், அதுபற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்கக்கூடாது என்றும் தடை விதித்த சல்மான் குர்ஷித் தமிழர்களின் நலனுக்காக குரல் கொடுபபார் என்று எதிர்பார்ப்பது தவறுதான். தமிழர்களின் உணர்வுகளை மதிக்காத சல்மான் குர்ஷித்திற்கும், மத்திய அரசுக்கும் தமிழக மக்கள் சரியான நேரத்தில் பாடம் புகட்டுவார்கள் என ராமதாஸ் கூறியுள்ளார். (2)




# கனடாவை போன்று இந்தியாவும் மாநாட்டை புறக்கணிக்க வேண்டும்

## சரத்குமார் தெரிவிப்பு



(சென்னை)

கனடாவைப் பின்பற்றி இந்தியாவும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி நிறுவன தலைவர் ஆர்.சரத்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்களை இந்த உலகமே அறியும். தம் சொந்த நாட்டு அப்பாவி மக்களை போர் என்ற பெயரில் இலட்சக்கணக்கில் கொன்று குவித்தது இலங்கை அரசு. இதை உணர்ந்த அனைத்து நாடுகளும் இலங்கையைக் கண்டிதது வரும் நிலையில் இந்தியா மட்டும் இலங்கை அரசுடனான உறவைப் புதுப்பித்துக் கொண்டே இருக்கிறது.

பொதுநலவாய மாநாட்டை புறக்கணிப்பதாக அண்மையில் கனடா நாட்டு பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் அறிவித்துள்ளார்.

தமிழர்கள் மீது அக்கறை கொண்டு இந்தியா பொதுநலவாய மாநாட்டு புறக்கணிப்பு முடிவை எடுப்பது அங்கே வாழும் தமிழர்கள் மீது மேலும் கவனத்தையும், பாதுகாப்பையும் அதிகரிக்கும் என்பதை உறுதியாக்கும்.

எனவே, மத்திய அரசு பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை புறக்கணிக்க முன்வர வேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன் என அவர் தனது அறிகையில் குறிப்பிட்டுள்ளார். (2)

# தமிழகம் வாழ் ஈழத் தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கவேண்டும்

(சென்னை)

தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் பி.அருள் மொழிமாறனால் பொதுநல வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இலங்கை அகதிகள் குடியுரிமை குறித்து பி.அருள்மொழிமாறன் தாக்கல் செய்துள்ள மனுவில், இந்திய பாராளுமன்றத்தில் கடந்த 1983 ஆம் ஆண்டு சட்டவிரோத குடியேற்றச் சட்டம் இயற்றியது. இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்தச் சட்டம் முழுவதும் மக்களுக்கு விரோதமானவை. எனவே அந்த சட்டத்தை இரத்து செய்கிறோம் என்று உச்சநீதிமன்றம் 12.7.2005 அன்று தீர்ப்பளித்துள்ளது.

பூடான் நாட்டில் இருந்து இந்தியாவுக்கு குடியேறிய 'சக்காஷ்' என்ற இனத்தை சேர்ந்த 65 ஆயிரம் மக்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் தேசிய மனித உரிமை ஆணையம் வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் நீதிமன்றம் சக்காஷ் இன மக்களுக்கு குடியுரிமை வழங்கும்படி மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் ஒரு இலட்சம் இலங்கை தமிழ் அகதிகள் வாழ்கின்றனர். அதில் 70 ஆயிரம் பேர் 115 அகதிகள் முகாம்களிலும், 35 ஆயிரம் பேர் வெளியிடங்களிலும் வசிக்கின்றனர்.

இவர்களும் சக்காஷ் இன மக்களை போல் 30 ஆண்டுகளுக்கு மேல் தமிழகத்தில் வாழ்கின்றனர்.

மேலும் ஒரு மனிதனின் ஆயுள் காலம் சுமார் 60 அல்லது 70 ஆணடுகள் ஆகும். அதில் 30 ஆண்டுகளுக்கு மேல் குடியுரிமை இல்லாமல் வாழ்வது என்பது இந்திய அரசியல் சட்டத்துக்கு எதிரானது மட்டுமல்லாது மனித தன்மைக்கும் எதிரானது.

எனவே, தமிழகத்தில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கை தமிழ் அகதிகள் சுமார் ஒரு இலட்சம் பேருக்கு இந்திய குடியுரிமை வழங்கவேண்டும் என்று மத்திய, மாநில அரசுக்கு உத்தரவிடவேண்டும் என்றும் அருள்மொழிமாறன் குறிப்பிட்டுள்ளார். (2)

# கச்சதீவை மீளப் பெறுவது குறித்து பதில் மனுத்தாக்கல் செய்ய வேண்டும்

## உச்சநீதிமன்றம் உத்தரவு

(புதுடில்லி)

இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீட்டுத் தரக் கோரி தி.மு.க. தலைவர் கருணாநிதி தொடர்ந்த வழக்கில் 6 வாரங்களுக்குள் மத்திய அரசு பதில் மனுத் தாக்கல் செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் கச்சதீவு பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் போது இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு சிறைபிடிக்கப்படுகிறார்கள்.

தொடர்ந்து பல ஆண்டுகளாக தமிழக மீனவர்கள் இலங்கை கடற் படையினரால் இவ்வாறு பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இதையடுத்து, கச்சதீவை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு பலமுறை கோரிக்கை விடப்பட்டது. சமீபத்தில் கச்சதீவு பிரச்சினை உச்ச நீதிமன்றத்தில் எழுந்த போது, மத்திய அரசிடம் பதில் மனுதாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது.

கச்சதீவு இந்தியாவுக்கு சொந்தமானதல்ல. மீன்வலைகளை உலர்த்துவதற்கு இந்திய மீனவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால், கச்சதீவை உரிமை கொண்டாட முடியாது என்று மத்திய அரசு தன் பதில் மனுவில் கூறியிருந்தது.

இதைத்தொடர்ந்து கடும் எதிர்ப்பு எழும்பியது. கச்சதீவு விடயத்தில் தமிழகத்திலுள்ள பலரும் ஒரே கருத்தை கொண்டுள்ள நிலையில், திடீரென மத்திய அரசு இப்படி ஒரு பெரிய குண்டை தூக்கிப் போட்டமை குறித்து பலரும் கண்டனம் தெரிவித்தனர். கச்சதீவு விடயத்திலுள்ள வரலாற்று பின்னணி குறித்து எடுத்துக் கூறி அதை மீக வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது.

இந்நிலையில், இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீட்கக் கோரி தி.மு.க. தலைவர் கருணாநிதி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அவர் தாக்கல் செய்த மனுவில், கச்சதீவு இந்தியாவுக்கே சொந்தமானது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கடந்த 1974, 1976 ஆம் ஆண்டுகளில் போடப்பட்ட ஒப்பந்தங்களில் கச்சதீவில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், இந்த ஒப்பந்தம் மீறப்பட்டுளளது.

தமிழக மீனவர்கள் இந்திய கடல் எல்லையில் மீன்பிடிக்கச் செல்லும் போது இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டும், கைது செய்யப்பட்டும் துன்புறுத்தப்படுகிறார்கள். இதனால், தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. மீனவர்களின் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, கச்சதீவை மீட்டு மீண்டும் இந்தியாவுக்கே தர வேண்டும் என்று மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறபபட்டுள்ளது.

இந்த மனு உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ். சவுகான், பாப்டே பெஞ்ச் முன்பு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது மத்திய அரசு சார்பில் ஆஜரான சட்டத்தரணி, மனுத்தாக்கல் செய்ய 8 வாரம் கால அவகாசம் கேட்டார். இதை ஏற்க மறுத்த நீதிபதிகள் கச்சதீவு தொடர்பாக 6 வாரங்களுக்குள் பதில் மனுத் தாக்கல் செய்ய வேண்டும் என மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானும் கட்டளையிடமாட்டான்; பிறரின் கட்டளைக்கும் கீழ்ப்படிய மாட்டான். அவன்தான் ஒன்றுக்கும் உதவாதவன்
– ஜேர்மன் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அடைக்கோழியாக சத்தமிடுவதை விட முட்டையிட்டுக் கொக்கரிப்பது மேல்!

வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிந்த கையோடு பதவிப் பிரமாணம் செய்து ஆட்சியைப் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். காலம் தாமதித்தால் பின் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும் எனப் பல தடவைகள் வலம்புரி சுட்டிக் காட்டியிருந்தது.

எனினும் அமைச்சுப் பதவி இழுபறி காரணமாகப் பதவியேற்பு காலதாமதமாகிக் கொள்ள, இப்போது வட பகுதியில் இயங்கும் திணைக்களங்களில் கடமையாற்றும் கணக்காளர்களுக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கணக்காளர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது மட்டுமன்றி சிங்கள இனம் சார்ந்த பதின்மூன்று கணக்காளர்கள் இந்த இடங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளமை வேறு கதை.

அமைச்சுப் பதவியில் நாங்கள் விட்டுக் கொடுக்கத் தெரியாமல் பதவி வேண்டும் என்று இறுக்க, அவர்கள் மிக நிதானமாகச் சிந்தித்து வட பகுதியில் உள்ள கல்வித் திணைக்களங்கள் மற்றும் சுகாதார, விவசாய திணைக்களங்களின் கணக்காளர்களை இடம் மாற்றியுள்ளனர்.

கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்திற்கு சிங்களவர் ஒருவரை கணக்காளராக நியமித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாண சபைத்தேர்தல் முடிந்த கையோடு இவ்வாறானதொரு இடமாற்றத்தை செய்வதென்பது ஒரு சுமுகமான நிர்வாகத்தை ஏற்படுத்த மாட்டாது.

எனினும் கணக்காளர்களை இடமாற்றம் செய்வதில் அரசு –திறைசேரி முந்திக் கொண்டுள்ளது.

இத்தகைய முந்தல்கள் தவறான நடைமுறை எனினும், இத்தகைய நடைமுறைகள் ஏற்படும் என எதிர்பார்த்து வடக்கு மாகாண சபை தன்னைத் தயார்படுத்தியிருக்க வேண்டும்.

என்ன செய்வது! எங்களிடம் இருக்கக்கூடிய இயல்பான பலவீனங்கள் எங்களின் பயணத்திற்கு பாதகமாகவே அமைகிறது.

பொதுவில் வட பகுதி அரசியல் நிலைமை என்பது அடைக்கோழிகளின் இயல்பைக் கொண்டதாகவே இருக்கிறது.

எதிலும் வேகமில்லை. காலம் பொன்னானது என்ற நினைப்பில்லை. ஆறப்போடுவது, நாளை பார்க்கலாம் என்று நினைப்பது உள்ளிட்ட பல்வகைப் பலவீனங்கள் எங்கள் அரசியல் தலைமைகளிடம் நிறையவே உண்டு.

இதற்கான காரணங்களில் முக்கியமானது வட பகுதி அரசியல் தலைமைகள் வடக்கில் தங்கியிருப்பதில்லை என்பதாகும்.

இவர்களின் சீவியம் பெரும்பாலும் கொழும்பிலேயே கழிகிறது. ஏதாவது கூட்டம், விழா என்றால் மட்டுமே இவர்கள் வட பகுதிக்கு வருகின்றனர்.

எல்லாக் கோழிகளும் விடிகாலைப் பொழுதில் கூவியெழுந்து தம் பணி செய்ய, அடைக்கோழிகள் மட்டும் விடிவதும் தெரியாமல் முட்டை இடுவதற்கான முயற்சியிலும் ஈடுபடாமல் ஒரே சோம்பலில் தூங்கிக் கிடக்கும்.

எப்போதாவது எழுந்தால் செட்டைகளை விரித்து சத்தம் வைத்து தன் வருகையை – எழுகையைக் காட்டிக் கொள்ளும். அவ்வளவுதான் அடைக்கோழிகளின் அலுவல்.

இதுபோன்ற நிலைமைதான் எங்கள் தமிழ் அரசியலிலும் உண்டு.

உள்ளூராட்சி சபையைக் கைபற்றினால் எல்லாம் செய்வோம் என்றவர்களால் செத்த நாயைக்கூட அடக்கம்செய்யமுடியாமல் இருக்கிறது.

அடைக்கோழி அரசியல் என்று தெரிந்த பின் மக்கள் பேசாதிருக்கக் கூடாது.

அடைக்கோழியின் வாலில் ஒரு காவோலைத் துண்டைக் கட்டி விட வேண்டும். அது தானே இழுத்து தானே ஓடி அடை மாறி முட்டையிட்டுக் கொக்கரிக்கும்.

அடைக்கோழியாக சத்தமிடுவதைவிட முட்டையிட்டுக் கொக்கரிப்பது எவ்வளவோ மேல்.

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் நவராத்திரி சிறப்பு நிகழ்ச்சி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.பிறவுண் வீதியிலுள்ள இராஜயோக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (அ-5)

❖ ❖ ❖ ❖ ❖ ❖

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பிரான்பற்று மார்க்கண்டு சுவாமிகள் இந்து அறநெறிப் பாடசாலையில் நாளை வெள்ளிக்கிழமை நவராத்திரி விழா இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ப.கயிலநாயகி தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக யா/ பிரான்பற்று கலைமகள் வித்தியாலய அதிபர் க.கிருஷ்ணானந்தா, சிறப்பு விருந்தினராக பிரான்பற்று கிராம அலுவலர் க.சுதர்சன், சமாதான நீதவான் கு.வரதராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் சைவப்புலவர் நித்திய தசீதரன் வல்லமை தாராயோ என்னும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (அ)

## தோத்திர மாலை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வலந்தலை இளையோர் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தி.தவரத்தினம் எழுதிய ஸ்ரீ ஆஞ்சநேயர் வழிபாட்டுத் தோத்திரமாலை வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அத்திபுரக் கந்தசுவாமி கோயிலில் பு.ஜெயரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர் வைத்திய கலாநிதி எஸ்.சுவாமிநாதன், சிறப்பு விருந்தினராக வவுனியா ஆத்மீக தொண்டர் பொன். தங்கவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வுக்கான ஆசியுரையை கவிஞர் வே.குமாரசுவாமியும் வெளியீட்டுரையை பா.பாலசுப்பிரமணியமும் வழங்கவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை காரைநகர் உப தபாலதிபர் க.ஜெயந்தன் பெற்றுக் கொள்ளவுள்ளார். (அ-5)

## நாட்டின் எதிர்க்கட்சி நாமே; ஜாதிக ஹெல உறுமய

தற்போதைய எதிர்க் கட்சிகள் மிகவும் பலவீனமான நிலையில் காணப்படுவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க் கட்சியுடன் இணைந்துகொள்ள வேண்டிய அவசியம் எதுவும் தமக்கு கிடையாது எனவும் தற்போது தாமே எதிர்க் கட்சியாக மாறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எந்த அரசாங்கம் குற்றச் செயலில் ஈடுபட் டாலும் அதற்கு எதிராக தமது கட்சி குரல் கொடுக்கும்.

ரணில் விக்ரமசிங்கவின் பின்னால் செல்லவேண்டிய அவசியம் எமக்கில்லை.

அத்துடன் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவது சட்ட ரீதியாக்க வேண்டுமென்ற பிரதிநிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்த கருத்திற்கு கடுமையான எதிர்ப்பை வெளியிடுகிறேன்.

புத்திசாதுரியமுடைய அனைவரினாலும் மரியாதையாக நடத்தப்படும் சரத் அமுனுகம இவ்வாறு கருத்து வெளியிட்டமை வருத்தமளிப்பதாக அவர் தெரிவித்தார். (அ-2)

## சித்திரவதைகளை அனுபவித்த தமிழ்ப்பெண் நாடு திரும்பினார்

சவுதி அரேபியாவில் பாரியளவில் சித்திரவதைகளை அனுபவித்த தமிழ் பெண் ஒருவர் நாடு திரும்பியுள்ளார். கடந்த இரண்டு ஆண்டுகளாக தாம் துன்புறுத்தல்களுக்கு இலக்கானதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

37 வயதான நான்கு பிள்ளைகளின தாயான பாப்பாத்தி என்ற பெண்ணே இவ்வாறு சித்திரவதைக்கு இலக்காகியுள்ளார்.

இந்தப் பெண் பலாங்கொடை எக்ஸ்லேன் தோட்டத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உடல் முழுவதிலும் தீக்காயங்களுடன் நாடு திரும்பிய இப்பெண் தெரிவிக்கையில்,

தனக்கான சம்பளம் வழங்கப்படவில்லை. உணவு வழங்கப்படவில்லை. அடிக்கடி தாக்குவார்கள். சூடாக்கிய எண்ணெயை உடலில் ஊற்றுவார்கள்.

வறுமை காரணமாக வெளிநாடு சென்ற எனக்கு இறுதியில் துன்பமே எஞ்சியது என பாப்பாத்தி தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை. (அ-2)

## சத்திய தரிசனம்



ஒழுக்கம் இல்லாத கடவுள் வழிபாடு, தியாகம் இல்லாத கடவுள் வழிபாடு, கடின உழைப்பு இன்றிய பணம் ஈட்டுதல், தவசீலம் அற்ற பக்தி ஆகியன பெரிய பாவங்களாகும்.

பணத்தால் மருந்தையும் நல்ல சிகிச்சையையும் பெறமுடியும். ஆனால் ஆரோக்கியத்தையோ, நோய் எதிர்ப்புச் சக்தியையோ, பணத்தால் பெறமுடியாது.

உங்களுடைய நினைவில் நீங்கள் கேட்டுப்பெற்ற நல்ல அறிவுரையினை நிறுத்திக்கொண்டு அது உங்களது ஒழுக்கத்தின் அம்சமாக மாறுகின்ற வரையில் அதனைப் பயிற்சி செய்திட முயலுங்கள்.

சாயி புகழ்ச்சி, இகழ்ச்சி ஆகியவற்றால் பாதிக்கப்படுவதில்லை. சாயி எந்த வகையில் நினைவுகூரப்பட்டாலும் அதில் மகிழ்ச்சியுறுகிறார். சாயிக்குத் தரப்படும் புகழ், இகழ் என எதற்கும் மதிப்பளிக்க வேண்டாம் என சாயி பக்தர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

உயர்ந்த இலட்சியங்களைத்தேடும்போது தோல்வியடைந்தால் கூட அந்தத் தோல்வி பாராட்டத்தக்கது. நொண்டி நரியைக் கொல்வதில் வெற்றி பெறுவதைவிட புலியைக் கொல்வதில் தோல்வியுறுவது மேன்மையானது என்பது தெலுங்குப் பழமொழி.

## 160 ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் 160ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீடு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நினைவு மண்டபத்தில் அதிபர் சு.இ. இராசசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இம் மலர் வெளியீட்டில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பால சுப்பிரமணியம் கலந்து கொள்ளவுள்ளார்.

மலருக்கான வெளியீட்டுரையை வே.பாலசுப்பிரமணியம் வழங்க,

அறிமுகவுரையை வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் வழங்கவுள்ளார்.

நூலின் முதற் பிரதியை சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட இணைப்பாளர் கருமதிருதி லயன் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா பெற்றுக் கொள்ளவுள்ளார். (அ-5)

## மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)


நல்லூர் ஞான வைரவர் ஆலய புதிய மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

ஆலய திருப்பணிச் சபை தலைவர் சு.தர்மரட்ணம் தலைமையில் நடைபெறும் இவ் அடிக்கல் நாட்டும் நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், யாழ் மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, நல்லூர் பிரதேச செயலர் [illegible] செந்தில் நந்தனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### சிவன் கோயிலுக்குச் செல்லும் போது முதலில் நந்திதேவரையும் கடைசியாக சண்டிகேஸ்வரரையும் வணங்க வேண்டுவது ஏன்?





சிவாலயங்களுக்கு செல்பவர்கள் முதலில் நந்திதேவரையும் கடைசியில் சண்டிகேஸ்வரரையும் வழிபட்டு வந்தால்தான் சிவ பலன் முழுமையாகக் கிடைக்கும். சிவ சந்நிதிக்குள் நுழையும் முன்பு நந்தீஸ்வரரிடம் அனுமதி பெறும் வகையில் அவரை வணங்க வேண்டும். வழிபாட்டுக்கு பின் சண்டிகேஸ்வரர் சந்நிதி முன் நின்று தீட்சை பெறாதவர்கள் சிவசிவ என்றும் தீட்சை பெற்றவர்கள் ஓம் நமசிவாய என்றும் மூன்று முறைகூறி வணங்க வேண்டும். இவ்வாறு செய்தால் சிவனின் கணக்காளரான சண்டிகேஸ்வரர் சிவாலயம் வந்ததையே பதிவு செய்வார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவுக்கு வந்தது ஒலிம்பிக் ஜோதி

ரஷ்யாவின் சோச்சி நகரில் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் குளிர்கால ஒலிம்பிக் விளை யாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன. இதை யொட்டி, கிரீஸ் நாட்டில் ஒலிம்பிக் விளை யாட்டுப் போட்டிகள் தொடங்கிய புராதனமான ஏதென்ஸ் நகரில் கடந்த ஞாயிறன்று ஏற்றப் பட்ட ஒலிம்பிக் ஜோதியானது ரஷ்யா வந்த டைந்தது. ரஷ்யாவின் அனைத்துப் பகுதிக ளிலும் செல்லவிருக்கும் இந்த ஜோதியின் தொடர் ஓட்டத்தினை டுமாஸ்கோவில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆரம்பித்து வைத் தார். அப்போது அவர் உரையாற்றுகையில்,

நமது கனவு நனவாகி வருகிறது. ஒலிம் பிக் இயக்கம் சமத்துவம், பன்முகத்தன்மை போன்றவை இணைந்து மரியாதையை வெளிப்படுத்தும் விதமாக உருவாக்கப்பட் டது. ஒலிம்பிக் ஜோதியின் ரஷ்ய ஓட்டம் ரஷ்யாவின் தன்மையையும், அதனை அவர கள் விரும்பும் விதத்திலும் உலகிற்கு எடுத் துக்காட்டும்.

இந்த நாள் ஒரு சந்தோஷமான முக்கியத் துவம் மிக்க நாள். உலகின் முக்கியமான விளையாட்டு நிகழ்வு, அமைதி மற்றும் நட் பின் சின்னமாகக் கருதப்படும் ஒலிம்பிக் ஜோதி



சிறிது நேரத்தில் ரஷ்யாவில் தனது ஓட்டத்தை ஆரம்பித்துவிடும். இவ்வாறு கூறினார்.

கிரெம்ளின் மாளிகை அருகில் கொண்டு செல்லப்படும்போது தீபம் அணைந்ததால் மீண்டும் ஏற்றப்பட்டது. ஓட்டம் தொடங்கிய 123 நாட்களில் மொத்தம் 65,000 கி.மீ. பயணித்து இந்த ஜோதியானது வரும் பெப்ர வரி மாதம் 7ஆம் திகதி கருங்கடல் அருகில் நிகழ்ச்சி ஆரம்பிக்கும் இடத்திற்கு வந்து சேரும்.

ரஷ்யாவில் புதிதாக அமுல்படுத்தப்பட்ட ஓரினச் சேர்க்கையாளர்கள் பற்றிய தகவல் பரவல் தடைச் சட்டம், ஒலிம்பிக் விளையாட்டு அரங்குகளைக் கட்ட உதவிய புலம் பெயர்ந்த தொழிலாளர்களை அதிகாரிக்ள் சுற்றி வளைத்த சர்ச்சை போன்றவை இந்த ஓட்டம் ரஷ்யாவில் நடைபெறுமா என்ற சந்தேகத்தை இதுநாள் வரை ஏற்படுத்தியிருந்தன.

## ● பயிற்சியின்போது....



பங்களாதேஷ் - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் தொடர் நேற்று ஆரம்பமாகியது. இந்தத் தொட ருக்காக பங்களாதேஷ் வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர். இங்கே பயிற்சியின்போது அணி வீரர்கள் ஒன்றுகூடி நிற்கின்றனர்.

# சீனிவாசன் தலைவராகலாம்

## உச்ச நீதிமன்றம் அனுமதி

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவராக, என்.சீனி வாசன் பொறுப்பேற்றுக் கொள்ளலாம் என உச்ச நீதிமன்றம் அனு மதி வழங்கியுள்ளது.

ஐபிஎல் தொடரில் எழுந்த சூதாட்ட குறித்து, சீனிவாசன் தலைமை யிலான கிரிக்கெட் சபை (பிசிசிஐ) நியமித்த குழு விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்தது. இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. பிசிசிஐ நிர்வாகிகள் தேர்தலில், தலைவர் பதவிக்கு சீனிவாசன் மீண்டும் போட்டியிட தடை விதிக்க மறுத்துவிட்ட நீதி மன்றம், தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டாலும் சூதாட்ட வழக்கில் மறு உத்தரவு வரும் வரை பொறுப்பேற்க கூடாது என்று நிபந்தனை விதித்திருந்தது.

இந்த வழக்கை விசா்ரித்த நீதிபதிகள், 'பிசிசிஐ தலைவராக சீனிவாசன் பொறுப்பேற்றுக் கொள்ளலாம். சூதாட்ட முறைகேடு குறித்து விசாரணை நடத்த புதிய குழு அமைக்கப்பட்டுள்ளது. பஞ்சாப் ஃ அரியானா முன்னாள் தலைமை நீதிபதி முகுல் முத்கல் தலைமை யில் மூத்த வழக்கறிஞர் நாகேஸ்வர ராவ், அசாம் கிரிக்கெட் சங்க உறுப்பினர் நிலாய் தத்தா ஆகியோர் அடங்கிய குழு முழுமையான விசாரணை நடத்தி 4 மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க




வேண்டும். இந்த விசாரணைக்கு கிரிக்கெட் சபை முழு ஒத்துழைப்பு வழங்குவதுடன், எந்த வகையிலும் இடையூறாக இருக்கக் கூடாது' என்று உத்தரவிட்டனர்.

# சம்பியன்ஷிப் டெனிஸ் போட்டியில் இருந்து ஷரபோவா விலகல்

உலக டெனிஸ் தரவரிசையில் முதல் 8 இடங்களை வகிக்கும் வீராங்கனைகள் மட்டுமே பங்கேற்கும் டபிள்யூ.டி.ஏ. பெண்கள் சம்பியன்ஷிப் டெனிஸ் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. இதன்படி இந்த ஆண்டுக்கான மொத்தம் ரூ.100 கோடி பரிசுத்தொகை கொண்ட 43ஆவது பெண்கள் சம்பியன்ஷிப் டெனிஸ் தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி முதல 27ஆம் திகதி வரை துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடைபெற உள்ளது.

இந்த போட்டியில் விளையாட தரவரிசையில் 3ஆவது இடம் வகிக்கும் ரஷ்ய் புயல் மரிய ஷரபோவா தகுதி பெற்றிருந்தார். இந்த நிலையில் அவர் இந்த போட்டியில் இருந்து திடீரென விலகியுள்ளார். தோள்பட்டை காயத்தால் அவதிப்பட்டு வருவதால். இந்த போட்டியில் தன்னால் பங்கேற்க இயலாது என்று 26 வயதான ஷரபோவா தெரிவித்துள்ளார். இதனால் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். காயத்தில் சிக்கியதால் அவர் கடந்த ஓகஸ்ட் மாதம் நடந்த சின்சினாட்டி திறந்த டெனிஸ் போட்டிக்கு பின் எந்த போட்டியிலும் ஆடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# துடுப்பின் நுனியில் சிலிக்கன் ரேப்; வழக்கில் பீற்றர்சனுக்கு நஷ்டஈடு

ஆஷஸ் தொடரில் துடுப்பின் நுனியில் 'சிலிகான் ரேப்' ஒட்டி விளையாடியதாக வெளியான செய்திக்கு எதிரான வழக்கில் கெவின் பீற்றர்சனுக்கு நட்ட ஈடு வழங்கப் பட்டுள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற்ற அவுஸ்திரே லியாவுக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொட ரில் இங்கிலாந்து அணி 3-0 என வென்றது. இத்தொடரில் நடுவரின் தீர்ப்பை மறுபரி சீலனை (டி.ஆர்.எஸ்.,) செய்ய பயன்படுத்தப் படும் 'ஹாட் ஸ்பாட்' தொழில்நுட்பத்தில் இருந்து தப்பிக்க இங்கிலாந்தின் பீட்டர்சன் உள்ளிட்ட சில வீரர்கள் தங்களது பேட்டின் நுனியில் 'சிலிகான் ரேப்' ஒட்டி விளையா டியதாக, அவுஸ்திரேலியாவை சேர்ந்த சனல்-9 உள்ளிட்ட தனியார் நிறுவனங்கள் தங்களது 'பேஸ்புக்', 'டுவிட்டர்' சமூக வலை தளங்களில் செய்தி வெளியிட்டிருந்தன. இதை எதிர்த்து லண்டன் நீதிமன்றில் பீற்றர்சன் வழக்கு தொடுத்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. இதில் பீற்றர்சன் சார்பில் ஆஜரான சட்டத் தரணி லூயிஸ் பிரின்ஸ் கூறுகையில்,

பீட்டர்சன் துடுப்பின் நுனியில் 'சிலிகான் ரேப்' ஒட்டி விளையாடியதாக வெளியான செய்திகள் முற்றிலும் ஆதாரமற்றது, என் றார்.

இதை ஏற்றுக் கொண்டு பீற்றர்சனிடம் மன்னிப்பு கேட்ட அந்த தனியார் நிறுவனம், சமூக வலைத்தளத்தில் இருந்து அந்த செய்தியை நீக்க ஒப்புக்கொண்டதோடு, அவருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்கு நட்ட ஈடு வழங்கவும் ஒப்புக்கொண்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியமட்ட மெய்வல்லுநர் போட்டி அருணோதய வீரர்கள் சாதனை



ஹோகாய் றொசான்


எம்.சாள்ஸ் அன்ரனி


ப.நிதுஷன்


எஸ்.ஜெஜீபன்


பி.லவணன்


பீ.விதுசன்


எம்.டிலக்சனா


எ.பவித்திரா

தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டி அண்மையில் கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இதில் அருணோதய கல்லூரி வீர வீராங்கனைகள் பதங்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அவர்களின் விபரம் வருமாறு,

17 வயது பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் எஸ்.ஜெஜீபன் 3.60 மீற்றர் தூரத்தைத் தாண்டி 2 ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை பெற்றுள்ளார்.

இதே பிரிவில் பீ.விதுசன் 3.30 மீற்றர் தூரத்தை தாண்டி வர்ண விருதை பெற்றார்.

17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் எஸ்.ஜென்ஷிகா 2.50 மீற்றர் தூரத்தைத் தாண்டி வர்ண விருதை பெற்றார்.

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் எம்.டிலக்சனா 2.50 மீற்றர் தூரத்தைத் தாண்டி 3 ஆவது இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார்.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் எம்.சாள்ஸ் அன்ரனி 4.05 மீற்றர் தூரத்தினை தாண்டி முதலாவது இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

ப.நிதுஷன் 3.95 மீற்றர் தூரத்தைத் தாண்டி 2 ஆவது இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார்.

பி.லவணன் 3.85 மீற்றர் தூரத்தை தாண்டி வர்ண விருதை பெற்றார்.

21 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் எ.பவித்திரா 3.05 மீற்றர் தூரத்தைத் தாண்டி முதலாவது இடத்தைப் பெற்று தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.


ஆர்.ஜக்சனா


எஸ்.ஜென்ஷிகா

ஆர்.ஜக்சனா 2.80 மீற்றர் தூரத்தினை தாண்டி 2 ஆவது இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தினை பெற்றுள்ளார்.

21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் ஹோகாய் றொசான் 4.00 மீற்றர் தூரத்தைத் தாண்டி 2 ஆவது இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தினைப் பெற்றுள்ளார்.

# இந்தியா-அவுஸ்திரேலியா இன்று பலப்பரீட்சை

இந்தியா-அவுஸ்திரேலிய அணிகள் மோதும் ஒரே ஒரு இருபது-20 ஓவர் போட்டி குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் இன்று (வியாழக்கிழமை) நடைபெறுகிறது. இந்தப் போட்டியில் விளையாடுவதற்காக இரு அணி வீரர்களும் ராஜ்கோட் சென்றடைந்துள்ளனர்.

டோனி தலைமையிலான இந்திய அணி கடைசியாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பாகிஸ்தானுக்கு எதிரான இருபது-20 ஓவர் தொடரில் விளையாடியது. 2 போட்டி கொண்ட இந்த தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது. தற்போது அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரே ஒரு 20 ஓவர் போட்டியில், வெற்றி பெறும் ஆர்வத்தில் இந்திய அணி உள்ளது.

இரு அணிகளும் கடைசியாக கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் நடந்த 20 ஓவர் உலக கோப்பையில் மோதின. இதில் அவுஸ்திரேலியா 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதற்கு இன்றைய போட்டியில் இந்தியா பதிலடி கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய மண்ணில் இரு அணிகளும் கடைசியாக 2012-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் மோதிய 20 ஓவர் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது.

மேலும் இன்றைய 20 ஓவர் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட வாய்ப்பும் இருக்கிறது. ராஜ்கோட்டில் நேற்று முன்தினம் பலத்த மழை பெய்தது. அடுத்த 3 தினங்களுக்கு மழை வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

போட்டி நடைபெறும் நேரத்தில் மழை இல்லாவிட்டால் ஆட்டத்தை நடத்திவிட முடியும் என்று சவுராஸ்டிரா கிரிக்கெட் சங்க நிர்வாகி தெரிவித்தார். இந்தப் போட்டியையொட்டி வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆட்டம் இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது. இரு அணி வீரர்கள் வருமாறு:-

இந்தியா: டோனி (கப்டன்), ஷிகார்தவான், ரோகித்சர்மா, வீராட்கோலி, யுவராஜ் சிங், ரெய்னா, ரவீந்திரஜடேஜா, அஸ்வின், புவனேஸ்வர்குமார், இஷாந்த் சர்மா, வினய் குமார், ஜெய்தேவ் உனகட், அம்பதிராயுடு, முகமதுசமி, அமித் மிஸ்ரா.

அவுஸ்திரேலியா: பெய்லி (கப்டன்), ஆரோன் பிஞ்ச், வாட்சன், மேக்ஸ்வெல், கோல்ட்டர், பவ்ல்னெர், ஹாடின், ஹென்றிக்ஸ், டோகர்ட்டி, ஜான்சன், வோகஸ், மெக்காய், மேடின் சன்.

# பங்களாதேஷ் முன்...

தற்போது சக்கர நாற்காலியைப் பயன்படுத்தும் இவரின் வயதையும், உடல்நிலையையும் கருத்தில் கொண்டு இவருக்கு மரண தண்டனை விதிக்கப்படுவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பங்காளாதேஷின் தேசியவாதக் கட்சியைச் சேர்ந்த மூத்த உறுப்பினர் சலாஹுதீன் காதர் சௌத்ரிக்கு போர்க் குற்றங்களுக்காக கடந்த வாரம் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து அங்கு ஆர்ப்பாட்டங்கள் வெடித்திருந்தன.

இதே சிறப்பு நீதிமன்றத்தினால் பங்காளாதேஷின் முக்கிய இஸ்லாமியவாதக் கட்சியான ஜமாத், இஸ்லாமியின் ஆறு தலைவர்கள் குற்றவாளிகளாக கடந்த சில மாதங்களில் அறிவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், பங்காளாதேஷின் ஆளுங்கட்சியான அவாமி லீக் கட்சி தம்மை பழிவாங்குவதாக எதிர்க் கட்சியினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அத்துடன், அவாமி லீக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட இந்த போர்க்குற்ற சிறப்பு நீதிமன்றம் சர்வதேச நியமங்களைக் கொண்டிருக்கவில்லை என மனிதவுரிமை அமைப்புகள் குற்றம் சுமத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(செ-11)

# கனடாவின் எதி...

னத்தை ஊர்ஜிதம் செய்துள்ளார்.

ஆனால் அவர் இலங்கை மனித உரிமை விடயத்தை நன்றாகக் கவனிக்க தவறிவிட்டார் என பீரிஸ் தெரிவித்தார்.

இதேவேளை, கனடா பொதுநலவாயத்திற்கான தனது நிதி வழங்கலை நிறுத்தப் போவதாக கூறினாலும் அது செயற்படுத்தப்பட மாட்டாதென பொதுநலவாய வணிகப் பேரவையின் பணிப்பாளர் நாயகம் மோகன் கவுல் கூறினார்.

பொதுநலவாய மாநாட்டிற்கு சமாந்தரமாக இடம்பெறும் வணிக அரங்கில் ஆயிரம் பேர் வரையில் பங்கேற்பர் எனவும் இதன் மூலம் 2 பில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கும் எனவும் அவர் கூறினார.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை காரணம் காட்டி கொழும்பில் நடைபெறவுள்ள 2013 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை புறக்கணிக்க போவதாக கனேடிய பிரதமர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-11)

# பிரபாவிற்கு நடந்...

13-வது அரசியல் அமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை விட அதிகளவான அதிகாரங்களை வழங்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்திடம் நீதியமைச்சர் ஹக்கீம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மாகாண சபைகள் தொடர்பில் இதே நிலைப்பாடுகளையே கொண்டுள்ளது.

இதில் ஒரே வித்தியாசம் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தில் இருந்து கொண்டு இந்த நிலைப்பாட்டை கொண்டுள்ளதுடன் கூட்டமைப்பு அரசுக்கு வெளியில் இருந்து அந்த நிலைப்பாட்டை கொண்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதவியுடன் கிழக்கு மாகாணத்தின் அதிகாரத்தை கைப்பற்றவே முஸ்லிம் காங்கிரஸ் இந்த சந்தர்ப்பத்தில் முயற்சித்து வருகிறது.

கூட்டமைப்பின் ஆதரவுடன் கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை கைப்பற்றி அதன் பிறகு இந்த மாகாணத்தை வடக்கு மாகாணத்துடன் இணைப்பதே அவர்களின் தேவையாக உள்ளது.

இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இனவாத, பிரிவினைவாத தேவையுடன் இணைந்து செல்வதாகும்.

மக்களின் அதிகாரத்தில் நம்பிக்கை வைக்காது சர்வதேச சக்திகள் மீது நம்பிக்கை வைத்து செயற்பட்டு மக்களால் நிராகரிக்கப்பட்ட மற்றும் தோல்வியடைந்த இரண்டு அரசியல் தலைவர்கள் நினைவுக்கு வருகின்றனர்.

இவர்களில் ஒருவர் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன். அவர்கள் மக்கள் அதிகாரத்தின் மீது நம்பிக்கை வைத்து செயற்படவில்லை. சர்வதேச சமூகத்தின் மீதான நம்பிக்கையில் அவரது ஈழ நாடு என்ற கனவு கட்டியெழுப்பட்டிருந்தது.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, மேற்குலக சக்திகளின் அழுத்தங்களின் அடிப்படையில் நாடு பயணம் செய்யும் பாதையை மாற்ற முடியும் என்று எண்ணினார்.

மேற்குலக சக்திகளின் அழுத்தங்களின் அடிப்படையில் நாட்டின் பயணத்தை மாற்ற முடியும் என்ற நம்பிய வேலுப்பிள்ளை பிரபாகரன் தோல்வியடைந்ததுடன் ரணில் விக்ரமசிங்க மக்களால் நிராகரிக்கப்பட்டார்.

ரணில் - பிரபாகரன் ஆகியோருக்கு நேர்ந்த கதியே நாளை ஹக்கீமுக்கும் நேரும். அதனை தவிர அவருக்கு வேறு எதுவும் கிடைக்கப் போவதில்லை. இது குறித்து முஸ்லிம் மக்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்பது எனது விருப்பமாகும் என விமல் வீரவன்ச தனது அறிக்கையில் கூறியுள்ளார். (செ-11)


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் திருமதி மங்கயற்கரசி செல்வரத்தினம்



கிளி.வினாசியோடை அ.த.க. பாடசாலை அதிபர் திரு.செ.சிவசங்கர் அவர்களின் அன்புத் தாயார் **அமரர் திருமதி மங்கயற்கரசி செல்வரத்தினம்** 09.10.2013 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர் சங்கம்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(கி-5126)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பொதுநலவாய...

காலப்பகுதி ஆகியவற்றில் அங்கு நிலைவரங்கள்மேலும்மோசமடைந் துள்ளதாக கூறிய அவர்,

கடந்த 2 வருடங்களில் இந்த விடயங்களில்எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதுடன, அந்த நிலைமைகளில் கணிசமான பின்னடைவு, மற்றும் அவை மேலும்மோசமடைதல்ஆகியவற்றை நாங்கள் காணக்கூடியதாக இருக்கிறது.

இதன் அடிப்படையில் இந்த பொது நலவாய தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்று நான்முடிவு செய்திருக்கிறேன என்று கனடிய பிரதமர் கூறியுள்ளார்.

அதுமாத்திரமன்றி பொது நலவாய அமைப்புக்கான கனடாவின் நிதி உதவிகளையும் தாம் நிறுத்துவது குறித்து ஆராய்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

## கமலேஸ் சர்மா இலங்கையின் கைப்பாவை

இதேவேளை கனடாவின் மூத்த செனட் உறுப்பினரும்பொது நலவாயத்துக்கான கனடிய பிரதமரின் தூதுவருமான ஹியூ சேகல், பொது நலவாய அமைப்பின் தலைமைச் செயலரான கமலேஸ் சர்மா, இலங்கையின் கைப்பாவையாகச் செயற்படுவதாக விமர்சித்துள்ளார்.

இலங்கை பிரதம நீதியரசர்ஷிராணி பண்டாரநாயக்காவின் விவகாரத்தை உதாரணமாகக் காண்பித்துப் பேசிய ஹியு, சேகல், அவை குறித்த தகவலகள் அமைப்பின் தலைவர்களுகககு செல்வதை செயலர்மறைத்து விட்டதாகவும் குற்றஞ்சாட்டினார்.

இதற்கிடையே கனடா இந்த மாநாட்டில் கலந்துகொள்வ தில்லை என்று எடுத்த முடிவு குறித்து கருத்து வெளியிட்ட பொதுநலவாய அமைப்பின் பேச் சாளரான ரிச்சர்ட் உக்கு தமது உறுப்பினர்களின் முடிவை தாம் மதிப்பதாகக் கூறியுள்ளார், ஆனால பொதுநலவாய அமைப்பின் தலைமைச் செயலர் இலங்கையின் கைப்பாவை என்று கூறியதை அவர் நிராகரித்துள்ளார். (செ-11)

# கனடாவின் எதிர்ப்பு...

முடிவு தனிச்சையான முடிவு.

அண்மையில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த அவுஸ்திரேலியா பிரதமர் உட்பட பல பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள், மாநாட்டில் கலந்து கொள்வதாக உறுதியளித்துள்ளனர்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள்கலந்து கொள்ளும்மாநாட்டை இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு பயன்படுத்த கூடாது.

பொதுநலவாயம் என்பது சுய விருப்பத்தின் அடிப்படையிலான ஒரு கூட்டமைப்பு. இதில் எந்த ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டின் விடயத்தை மதிப்பிட உரிமையில்லை.

கனேடிய பிரதமர் ஸ்ரீபன் ஹார்பர் பொதுநலவாய மாநாட்டில் பங்கு பற்றப் போவதில்லை யெனும் தனது தீர்மா

19-ம் பக்கம் பார்க்க

# இந்தியாவின் அழு...

அமைச்சர் சல்மான் குர்ஷித்தை சநதித்து பேசிய போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், சிறுபான்மை மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக இந்த அதிகாரங்கள் அவசியமானது.

முஸ்லிம் மக்களின் அபிவிருத்திக்கு இந்தியாவின் உதவிகள் தேவைப்படுகிறது என்றும் ஹக்கீம் இந்திய அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அண்மையில் 13-வது திருத்தச் சட்டத்தில்உள்ள அதிகாரங்கள்மாகாண சபைக்கு வழங்கப்பட வேண்டும் என்ற யோசனையை கொண்டு வந்து நிறைவேற்றியது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)


# Study in Latvia ( Europe)

## Schengen Visa( Valid for 25 Countries)



## Why Study In Latvia?

* Bachelors / Master / Doctoral level
* Government Approved University
* English Medium
* IELTS Not Required
* Easy Visa procedures
* One day old funds acceptable
* Very low course fee
* Low cost of living
* 20 Hours part time Allowed
* Dependant can work full time

iCS Study Overseas

தொடர்புகளுக்கு
107, B 1/1 Galle Road, Colombo - 06
Tel: 434 3322 , 077 3013060
77, Clock Tower Road, Jaffna.
021 7306000

(C-5114)


# இலங்கை...

திருந்தார்.

கனேடியப்பிரதமரின் இந்த அறிவிப்பை அடுத்து, டேவிட் கமரூன் பொதுநலவாய அரசியல் தலைவர்களில் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதை நியாயப்படுத்த வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில்பொதுநலவாய மாநாட்டை கொழும்பில் நடத்துவது என்ற முடிவு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கடந்த ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்டதாக பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய விவகாரத்துக்கான பணியகத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையின் அரசியல் தலைமைக்கு கடுமையான செய்தி ஒன்றை பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் எடுத்துச் செல்லவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மனிதவுரிமை விடயங்களில் மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கு பதிலாக, பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கிப் போவது சிறந்த வழியாக அமையும்என தாம நினைக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(செ-11)

# அமைச்சர...

இதனிடையே, 21 பிரதியமைச்சர்கள இன்று நியமிக்கப்படவுள்ளார்கள்.

மக்களுக்கு எந்தவிதமான நிவாரணங்களும் கிடைக்காத நிலையில, அமைச்சரவையை அதிகரித்து குட்டிகளை ஈன்று பிரதியமைச்சர்களையும் நியமித்து அந்த சுமையையும் பொது மக்கள் மீது ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகினறமையை நாங்கள் காணக்கூடியதாக உள்ளது என்றார் கஜந்த கருணாதிலக. (செ-11)

# கனடாவின்...

கொடுத்துவருகின்றது. எனவே அந்நாட்டின் ஒத்துழைப்பு மாநாட்டிற்கு அவசியம் என்றார்.

மேலும் இலங்கையில் ஆட்சி முறைமை, நல்லிணக்கம், மனித உரிமைகளை மதித்தல் ஆகிய துறைகளில் முன்னேற்றம் ஏற்படுவதை உறுதி செய்ய பொதுநலவாய செயலகம் இலங்கையுடன் நெருக்கமாக வேலை செய்வதா நிச்சாட் உக்கு கூறினார். (செ-11)

# முதலமைச்சர் விக்...

லமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அங்கு கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ் உட்பட வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைகளத் தலைவர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (செ-6)


# பணிநிலை வேண்டுகை

வடக்கின் நவீன அச்சுக் கலையின் முன்னோடி
**கரிகணன் பிறிண்டேர்ஸ்**
தமது நிறுவனத்திற்கு கீழ்க்காணும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோருகின்றது.

## கணினி பக்க வடிவமைப்பாளர் Graphics Designer

தகமைகள்
- DTP (E.g.: Indesign, Photoshop, Coreldraw ) தொடர்பான கல்வியறிவு
- மொழித்தேர்ச்சி
- முன்னனுபவம் விரும்பத்தக்கது

## கணினி தட்டெழுத்தாளர் Type Setter

தகமைகள்
- போதுமான Typing Speed (30 Word per Minute)
- மொழித்தேர்ச்சி
- முன்னனுபவம் விரும்பத்தக்கது

எதிர்வரும் 2013.10.14ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும். மின்னஞ்சல் ஊடாக விண்ணப்பிப்போர் தங்கள் விரும்பும் பதவியினை (Mail Subject) குறிப்பிட்டு அனுப்பவும்.

தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படுவதுடன் ETF, EPF போன்ற அரசதிட்டங்களுங்களுடனும் இணைத்துக் கொள்ளப்படுவீர்கள்.

தபால்மூலம் அனுப்பவேண்டிய முகவரி: மனிதவள முகாமையாளர்
கரிகணன் பிறிண்டேர்ஸ்
இல. 681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் மூலம் அனுப்பவேண்டிய முகவரி: print@harikanan.com

(C-5119)



தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகை

# உலக நாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

* 220 ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
* சகல நாடுகளுக்கும் 3 - 5 வேலைநாட்களில் சேவை
* மிக குறைந்த கட்டணம் மிக விரைவான சேவை.

வாடிக்கையாளர்களுக்கான விசேட சலுகை U.K. 3Kg பொதிக்கு 2700/= ரூபா மட்டுமே

பல நாடுகளுக்கு கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன

கிரிஷான் Worldwide Courier Service
499/1, பருத்துறை வீதி, நல்லூர், (நல்லூர் கோவில் முன்பாக)
Hot Line: +94770569642, +94770166746

(C-5120)



- ஐரோப்பிய நாடான போலந்து நாட்டில் படிக்க உழைக்க 7 இலட்சம் மட்டும் போதும்.
- மலேசியாவில் படிக்க உழைக்க 3 இலட்சம் மட்டும் போதும்
- ஹொலண்ட், நெதர்லாந்தில் படிக்க மாதம் 2 இலட்சம் வரை உழைக்க சொற்ப பணம் போதும்.
- இத்தாலி சட்டரீதியாக செல்லலாம்.
- எந்த வயதினரும் கனடாவுக்கு சட்ட ரீதியாக Visit Visa வில் செல்லலாம்.
- நியூசிலாந்தில் படிக்க IELTS தேவையில்லை. பகுதிநேர தொழில். 2 வருடத்தில் நிரந்தரக்குடியுரிமை.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090

(C-5124)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org